இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 64 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 26 – வெள்ளிக்கிழமை 13 அக்டோபர் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 64: Thiruvalluvar Year - 2054 - Purattasi 26 - Friday 13 October 2023 - Madurai 12 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டின் மாநில விலங்கான - வரலாற்றுச் சிறப்புமிக்க

# நீலகிரி வரையாடு திட்டம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.10.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாட்டினை பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு அரசின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு முன்னோடித் திட்டமான நீலகிரி வரையாடு திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் எம்.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் வீ.நாகநாதன், ஆனைமலை புலிகள் காப்பகத்தின் கள இயக்குநர் மற்றும் வனப் பாதுகாவலர் எஸ்.ராமசுப்ரமணியன், கோயம்புத்தூர் மாவட்ட வன அலுவலர் என்.ஜெயராஜ், நீலகிரி வரையாடு பற்றிய குறும்படத்தை தயாரித்த பிரவீன் சண்முகானந்தம் மற்றும் தனுபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாணவர்களுக்கு வரையாடு பற்றிய விழிப்புணர்வு

## புத்தகங்களை வழங்கினார் முதல்வர்!

**சென்னை, அக். 13-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.10.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாட்டினை பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு அரசின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு முன்னோடித் திட்டமான நீலகிரி வரையாடு திட்டத்தை தொடங்கி வைத்தார். மேலும், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வரையாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புத்தகங்களை வழங்கினார்.**

**நீலகிரி வரையாடு மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் வாழ்கிறது!**

“வரையாடு” என்று மக்களால் பரவலாக அழைக்கப்படும் “நீலகிரி வரையாடு” என்பது மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் அழிந்து வரும் இனமாகும். இது புவிஈர்ப்பு விசைக்கெதிராக கடினமான குன்றின் மீது ஏறும் திறன்களுக்காக புகழ் பெற்றது. இந்த மலை ஆடுகளை “மவுண்டன் மோனார்க்” என்று அழைக்கிறார்கள்.

2000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் சங்க இலக்கியங்களில் நீலகிரி வரையாட்டைப் பற்றிய பல குறிப்புகள் உள்ளன. சங்க காலத்தின் ஐம்பெரும் காப்பியங்களில், சிலப்பதிகாரம் மற்றும் சீவகசிந்தாமணியில், நீலகிரி வரையாடு மற்றும் அதன் வாழ்விடம் பற்றிய விளக்கங்கள் இடம்பெற்றுள்ளது.

**நீலகிரி வரையாடு தமிழ்நாட்டின் மாநில விலங்காக அறிவிப்பு!**

மேலும், பதினெண்மேல்கணக்கு நூல்களான நற்றிணை, ஐங்குறுநூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை போன்ற நூல்களில் நீலகிரி வரையாடு பற்றி விளக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி 1600-1700இல் திரிகூடராசப்பக் கவிராயரால் எழுதப்பட்ட குற்றாலக் குறவஞ்சி என்ற நாடகத்தில் நீலகிரி வரையாடு குறித்து “குறத்தி மலை வளம் கூறல்” என்ற பாடலில் விவரிக்கப்பட்டுள்ளது, வரையாடு இப்பகுதியின் பல்லுயிர் செழுமையைக் குறிக்கும் விலங்குகளில் ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் அதன் சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார முக்கியத்துவத்திற்கு சான்றாக, நீலகிரி வரையாடு தமிழ்நாட்டின் மாநில விலங்காக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி வரையாடு திட்டமானது, நீலகிரி வரையாடு பற்றிய எண்ணிக்கை, விநியோகம் மற்றும் சூழலியல் பற்றிய சிறந்த புரிதலை உருவாக்குதல்; நீலகிரி வரையாட்டின் வரலாற்று வாழ்விடங்களை மீண்டும் அறிமுகப்படுத்துதல்; நீலகிரி வரையாட்டிற்கு உள்ள அச்சுறுத்தலை நிவர்த்தி செய்தல்; “நீலகிரி வரையாடு” இனங்கள் பற்றிய விழிப்புணர்வை பொது மக்களிடையே அதிகரிக்கச் செய்தல்; நீலகிரி வரையாடு தினம் 1975 இல் நீலகிரி வரையாடு பற்றிய முதல் ஆய்வுகளில் முன்னோடியாக இருந்த டாக்டர் ஈ.ஆர்.சி டேவிதாரின் பிறந்த நாளான அக்டோபர் 7 ஆம் நாள் நீலகிரி வரையாடு தினமாக அவரை சிறப்பிக்கும் வகையில் கொண்டாடப்பட்டு வருகிறது; “நீலகிரி வரையாடு” உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் சுற்றுச்சூழல் சுற்றுலா நடவடிக்கைகளை உருவாக்குதல்; பள்ளி மாணவர்களுக்கு நீலகிரி வரையாடு குறித்த பாடங்களை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களைக் குறிக்கும் வகையில் டிசம்பர், 2022ல் அரசாணை வெளியிடப்பட்டது.

**ரூ.25 கோடி செலவில் பாதுகாப்பு நடவடிக்கைகள்!**

இந்தத் திட்டம் ரூ.25 கோடி செலவில், நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை, பரவல் மற்றும் சூழலியியல் பற்றிய சிறந்த புரிதலை மேம்படுத்துதல், வரையாடுகளின் வரம்பு முழுவதும் தரப்படுத்தப்பட்ட முறைகளை பயன்படுத்தி ஒத்திசைக்கப்பட்ட கணக்கெடுப்புகள் நடத்துதல், நீலகிரி வரையாட்டினை மறு அறிமுகம் செய்தல் மற்றும் கண்காணிப்பு, பாதிக்கப்பட்ட வரையாடுகளுக்கு நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை அளித்தல், பணியாளர்களுக்கு கள உபகரணங்கள் மற்றும் பயிற்சி அளித்தல், மேல் பவானியில் உள்ள சோலா புல்வெளியில் முன்னோடியான மறுசீரமைப்பு பணி மேற்கொள்ளுதல், சூழல் சுற்றுலா திட்டங்களை செயல்படுத்துதல், தகவல் தொடர்பு மற்றும் எல்லை போன்றவை குறித்த முக்கிய நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படும்.

> **நீலகிரி வரையாடு திட்டப்பணிகளை செயல்படுத்த திட்ட அலுவலகம் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முழு நேர முதல் திட்ட இயக்குனரையும் அரசு நியமித்து ஆணை வெளியிட்டு, பல்வேறு திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நான்கு முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஒரு மூத்த விஞ்ஞானியையும் நியமனம் செய்துள்ளது.**

நீலகிரி வரையாடு திட்டப் பணிகளை செயல்படுத்த திட்ட அலுவலகம் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முழு நேர முதல் திட்ட இயக்குனரையும் அரசு நியமித்து ஆணை வெளியிட்டு, பல்வேறு திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நான்கு முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஒரு மூத்த விஞ்ஞானியையும் நியமனம் செய்துள்ளது.

இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் எம்.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் வீ.நாகநாதன், ஆனைமலை புலிகள் காப்பகத்தின் கள இயக்குநர் மற்றும் வனப் பாதுகாவலர் எஸ்.ராமசுப்ரமணியன், கோயம்புத்தூர் மாவட்ட வன அலுவலர் என்.ஜெயராஜ், நீலகிரி வரையாடு பற்றிய குறும்படத்தை தயாரித்த பிரவீன் சண்முகானந்தம் மற்றும் தனுபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டுக்கு 3 ஆயிரம் கன அடி நீர் திறக்க காவிரி ஒழுங்காற்றுக்குழு பரிந்துரைத்த நிலையில்

# காவிரி மேலாண்மை ஆணையம் இன்று கூடுகிறது!

### கூட்டத்தில் 16 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிட கேட்போம் என அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

**புதுடெல்லி, அக். 13-**

**தமிழ்நாட்டிற்கு 3 ஆயிரம் கனஅடி நீர் திறக்க காவிரி ஒழுங்காற்றுக்குழு பரிந்துரைத்த நிலையில், காவிரி மேலாண்மை ஆணையம் இன்று கூடுகிறது. இந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டுக்கு கூடுதல் தண்ணீர் திறந்து விட வேண்டும் என வலியுறுத்தப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.**

புதுடெல்லியில் கடந்த மாதம் 28 ஆம் தேதி நடைபெற்ற காவிரி ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில் தமிழ்நாட்டுக்கு வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி நீர் திறக்க வேண்டும் என கர்நாடகாவுக்கு உத்தரவிடப்பட்டது. ஆனால் நீர் திறக்கப்படவில்லை. இந்நிலையில், காவிரி ஒழுங்காற்றுக் குழுக் கூட்டம் காணொலி மூலம் நடைபெற்றது.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவை கர்நாடக அரசு செயல்படுத்தவேண்டும் என்றும், காவிரியில், வினாடிக்கு 13 ஆயிரம் கன அடி வீதம் 15 நாட்களுக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டது.

தமிழ்நாட்டிற்கு அக்டோபர் 16 முதல் 30 ஆம் தேதி வரை விநாடிக்கு 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்க வேண்டும் என காவிரி மேலாண்மை ஆணையத்திற்கு, ஒழுங்காற்றுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

இந்நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் இன்று நடைபெற உள்ளது. காவிரி மேலாண்மை ஆணையத் தலைவர் எஸ்.கே.ஹல்தர் தலைமையில் இன்று பிற்பகல் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அமைச்சர் துரைமுருகன் பேட்டி!**

இதனிடையே அமைச்சர் துரைமுருகன் நேற்று, சென்னை – கோட்டூர்புரத்திலுள்ள அவரது இல்லத்தில் பேட்டி அளிக்கையில்,

நாளை (அதாவது இன்று) நடைபெறும் காவேரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் 16 ஆயிரம் கன அடி தண்ணீர் கேட்போம்.

18 நாட்கள் மூன்றாயிரம் கன அடி தண்ணீர் விட்டதில் நமக்கு இதுவரை 4.21 டி.எம்.சி. கிடைத்துள்ளது.

இன்னும் நமக்குக் கிடைக்க வேண்டியது .454 டி.எம்.சி. தண்ணீர்தான்,

மேலாண்மை ஆணையம் சொன்னவாறு கர்நாடக மாநிலம் தண்ணீரை விட்டு வருகிறது. மேட்டூர் அணை இனி பாசனத்திற்கு திறக்க முடியாது. குடிநீர் கிடைக்க மட்டும் ஏற்பாடு செய்யப்படும்.

காவேரி நீருக்காக நேற்று டெல்டா மாவட்டங்களில் நடத்திய போராட்டத்தை நான் பாராட்டுகிறேன்.

காவிரி விவகாரத்தில் வழக்கு போட்டுக்கிட்டே இருப்போம் தண்ணீர் வாங்கிட்டு இருப்போம். அவங்களும் அதே மாதிரி தான் செய்து கொண்டிருப்பார்கள்.

கர்நாடக மாநில அரசு உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பயந்து தண்ணீர் கொடுக்க நினைத்தாலும் கர்நாடக மாநில மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கக் கூடிய காரணத்தினால் கர்நாடக மாநில அரசும் நாடகம் ஆட வேண்டி உள்ளது.

இருப்பினும் டெல்லியில் நடைபெறும் காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், தமிழ்நாட்டுக்கு காவிரியிலிருந்து கூடுதலாக 16ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துவோம்.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேட்டியளித்தார்.

## காவிரி விவகாரத்தில் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட

# முதலமைச்சரின் தனித் தீர்மானத்தை ஒன்றிய அரசுக்கு அனுப்ப முடிவு!

*சென்னை, அக்.13-*


*காவிரி விவகாரத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட முதலமைச்சரின் தனித் தீர்மானத்தை ஒன்றிய அரசுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*உச்சநீதிமன்ற இறுதித் தீர்ப்பில் வரையறுக்கப் பட்டபடி காவிரியில் கர்நாடக அரசு உரிய நீரை திறந்து விட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தமிழ்நாடு சட்டப்பேரவையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 9ந் தேதி திங்கட்கிழமை அரசினர் தனித்தீர்மானம் கொண்டு வந்தார்.*

*முதலமைச்சர் கொண்டு வந்த தனி தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேறியது. தமிழ்நாட்டு மக்களின் உணவுத் தேவைக்கான மட்டுமல்ல மனித உயிர்களின் உயிர்த் தேவைக்கு அவசியமானது காவிரி நீர்! அதனைத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பெற்றுத் தருவதில் எந்தச் சூழலிலும் விட்டுக் கொடுக்காமல் வாதிட்டுப் பெற்றுத் தருவோம் என்றும் அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.*

*காவிரி விவகாரத்தில் ஒன்றிய அரசு முறையாகச் செயல்பட்டுத் தமிழ்நாட்டு மக்களுக்கு காவிரி நீரைப் பெற்றுத் தர வேண்டும் என்றும் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.*

*இந்நிலையில், பேரவையில் நிறைவேற்றப்பட்ட தனித்தீர்மானம் பேரவைச் செயலகம் மூலம் தலைமைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பின்னர் ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.*



இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 13-10-2023

# பழனிசாமியின் காவிரி துரோகங்கள் 2

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித்தீர்ப்பு 5.2.2007 அன்று வந்தது. அப்போது தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியே இருந்தது. இந்த இறுதித் தீர்ப்பில் தமிழகத்தின் பாசனப் பரப்பு 4,56,130 ஏக்கர் விடுபட்டு இருந்தது. இதனைக் கழக அரசு கடுமையாக எதிர்த்தது. உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டினார் முதல்வர் கலைஞர். அ.தி.மு.க.வும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது. காவிரி பாசன விவசாயிகளின் பாரம்பர்ய உரிமையைக் காக்க காவிரி மன்ற இறுதித் தீர்ப்பில் கூடுதலாக 60 டி.எம்.சி. நீர் கோரி 2007 ஆம் ஆண்டு மே மாதம் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் ஒரு சிறப்பு முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

**உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்கிறோம் என்றால் என்ன பொருள்? காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை நாம் ஏற்கவில்லை என்று பொருள். உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஆட்சி மாற்றம் ஏற்படுகிறது. முதல்வர் ஜெயலலிதா, அந்த வழக்கை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டும் என்று வழக்குப் போட்டார். அதாவது இறுதித் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதே இதன் பொருள். முதல் சறுக்கல் இது.**

இதன்படி அரசிதழில் 19.2.2013 அன்று வெளியானது. இதனையே தனது பெரிய சாதனையாகச் சொல்லிக் கொண்டார். ஜெயலலிதா மரணம் அடையும் வரை அந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவில்லை. பழனிசாமி முதலமைச்சராக இருக்கும் போதுதான் இறுதி விசாரணைக்கு வந்தது.

2017 ஆம் ஆண்டு ஜூலை 10, செப்டம்பர் 20 ஆகிய இரண்டு நாட்களும் விசாரணை நடந்தது. இங்குதான் பழனிசாமி அரசின் கையாலாகாத்தனம் வெளிப்பட்டது. சரியான வாதங்களை வைத்து அரசு வாதாடவில்லை. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பில் இரண்டு முக்கியமான கருத்துருக்கள் உள்ளன.

**1. நிலத்தடி நீர் பயன்பாட்டை காவிரி நதியின் நீர் உபயோகமாகக் கருதக்கூடாது.**

**2. குடிநீர், தொழிற்சாலை, உள்ளாட்சி ஆகியவற்றுக்காக தண்ணீரைப் பயன்படுத்தினால் அந்தத் தண்ணீர் அந்தந்த மாநில கணக்கீட்டில்தான் சேர்க்கப்படும். - என்று இறுதித்தீர்ப்பில் உள்ளது. அதை வைத்து பழனிசாமி அரசு வாதங்களை வைக்கவில்லை.**

**தனக்கு நிலத்தடி நீர் குறைந்துவிட்டதாக கர்நாடக அரசு வாதங்களை வைத்ததை பழனிசாமி அரசு மறுக்கவில்லை. தமிழகத்துக்கு நிலத்தடி நீர் வளம் உள்ளதாகச் சொல்லி 10 டி.எம்.சி. குறைக்கப்பட்டதை பழனிசாமி அரசு கேள்வி எழுப்பவில்லை. காவிரி நடுவர் மன்ற இறுதித்தீர்ப்பின் கருத்துருவைச் சொல்லி வாதிடவில்லை பழனிசாமியின் அரசு.**

பெங்களூரு மாநகர குடிநீர்த் தேவை குறித்து கர்நாடக அரசு வாதம் வைத்ததுபோல சென்னை, சேலம், ஈரோடு, தஞ்சை, திருச்சி ஆகிய மாநகராட்சிகளின் தண்ணீர்த் தேவையை பழனிசாமி அரசு சொல்லி வாதங்களை வைத்திருக்க வேண்டும். மேலும் இராமநாத புரம், தருமபுரி கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் தேவையையும் சொல்லி இருக்க வேண்டும். எதையும் செய்யவில்லை.

உச்சநீதிமன்றத்தில், 60 டி.எம்.சி. கூடுதலாகக் கேட்டு முதல்வர் கலைஞர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது வழக்கு. ஆனால் கிடைத்த 192 டி.எம்.சி.யில் 14.75 டி.எம்.சி.யை இழந்ததுதான் பழனிசாமியின் சாதனை ஆகும்.

“தமிழக அரசின் மனுவில் என்ன சொல்லப்பட்டு இருந்ததோ அதைக் கூட நீதிமன்றத்தில் சொல்லி வாதங்களை வைக்கவில்லை. தமிழக அரசின் வழக்கறிஞர் பேசுவதும், மனுவில் உள்ளதும் வேறு வேறாக இருக்கிறதே” என்று நீதிபதிகளே சொன்னார்கள். இப்படி அலட்சியமாக வழக்கை நடத்திய அரசுதான் அ.தி.மு.க. அரசு. வழக்கின் இறுதித் தீர்ப்பு 2018 ஆம் ஆண்டு வந்தது.

அதன்படி காவிரி ஆணையம் அமைக்கப்பட்டு உடனடியாக நீர்ப் பிரச்சினை முறைப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். அதனை ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்யவில்லை. பா.ஜ.க.வை செய்ய வைக்க பழனிசாமியால் முடியவும் இல்லை. ஒன்றிய பா.ஜ.க. அரசு அதிகாரமற்ற ஒரு அமைப்பைத் தொடங்கியது. அதனை எடப்பாடி அரசு தட்டிக் கேட்கவில்லை. ஒன்றிய அரசின் ஜல்சக்தித் துறையோடு இதனைச் சேர்த்து விட்டார்கள். அதையும் எடப்பாடி அரசு தட்டிக் கேட்கவில்லை. இதைவிட பழனிசாமியின் பச்சைத் துரோகம் என்ன இருக்க முடியும்?

இவ்வளவு துரோகங்களையும் செய்துவிட்டு, ‘காவிரி காப்பாளர்’ என்ற பட்டத்தை தனக்குத் தானே கொடுத்துக் கொண்டார் பழனிசாமி. ‘டெல்டா விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றியதால் காவிரி காப்பாளர் என்ற பட்டத்துக்கு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி மிகவும் பொருத்தமானவர்’ என்று அன்றைய ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தை தமிழ்நாடு சட்டமன்றத்தில் சொல்ல வைத்துக் கொண்டார் பழனிசாமி.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் மிகச் சரியாக ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டதா என்றால் இல்லை. 2020 - இந்த ஒரு ஆண்டு மட்டும் தான் ஜூன் 12 அன்று திறந்துள்ளார்கள்.

2012 முதல் அ.தி.மு.க. ஆட்சியில் மேட்டூர் அணை திறந்த நாட்கள் இவை -

* செப்டம்பர் 17
* ஆகஸ்ட் 2
* ஆகஸ்ட் 10
* ஆகஸ்ட் 9
* செப்டம்பர் 20
* அக்டோபர் 2
* ஜூலை 19

* ஆகஸ்ட் 13 - என 2012 ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் தங்கள் விருப்பப்படி விவசாயிகளைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் தான் தண்ணீரைத் திறந்து விட்டுள்ளார்கள். இப்படிப்பட்ட பழனிசாமிதான் காவிரி காப்பாளராக தன்னைக் காட்டிக் கொண்டார். மயிலாடுதுறையில் நடந்த காவிரி புஷ்கரம் விழாவில் கலந்து கொண்டு புனித நீராடினார் பழனிசாமி. பச்சைத் துண்டு போட்டுக் கொண்டார். மாட்டு வண்டியில் அழைத்து வரப்பட்டார். ‘நானும் ஒரு விவசாயி’ என்றார். ‘விவசாயி நாடாள்வது சிலருக்குப் பிடிக்கவில்லை’ என்றார். இவை அனைத்தும் பம்மாத்து நாடகங்கள் என்பது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும். தெரிந்தேதான் மக்கள் அவரை ஆட்சியை விட்டு இறக்கினார்கள்.

எனவே, பழனிசாமி பழைய பொய்களை அவிழ்த்துவிடத் தேவையில்லை. அவை ஊர் சிரித்த பொய்கள்தான்!

## ககன்யான் விண்கலத்தின் முதல்கட்ட சோதனை! வரும் 21 ம் தேதி நடைபெறும்!

பெங்களூரு, அக். 13 -

மனிதர்களை விண்கலம் மூலம் பூமியின் சுற்றுவட்டப் பாதையின் 400 கிலோ மீட்டர் தொலைவுக்கு கொண்டுசென்று, பாதுகாப்பாக மீண்டும் பூமிக்கு கொண்டுவரும் ககன்யான் திட்டம் அடுத்தாண்டு செயல்படுத்தப்பட உள்ளது.

இதற்கான பல்வேறுகட்ட சோதனைகளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ மேற்கொண்டு வருகிறது. விண்கலத்தை ராக்கெட் மூலம் விண்ணுக்கு அனுப்பும் முதல் கட்ட சோதனை வரும் 21ம் தேதி நடைபெற இருக்கிறது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் விண்வெளி மையத்திலிருந்து ககன்யான் திட்ட விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பி சோதிக்கப்படும் என்று ஒன்றிய அறிவியல் தொழில்நுட்பத் துறை தெரிவித்துள்ளது. ககன்யான் விண்கலம் ராக்கெட் மூலம் விண்வெளிக்கு கொண்டு செல்லப்பட்டு, மீண்டும் பூமிக்கு கொண்டுவரப்படும். வங்கக் கடல் பகுதியில் விழும் இந்த விண்கலம், இந்திய கடற்படையினர் மூலம் மீட்கப்படும். விண்கலம் விண்ணை நோக்கிப் பயணிக்கும் போது, ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், அதிலிருந்து விண்வெளி வீரர்கள் வெளியேறுவதற்கான சோதனையும் நடத்தப்படுகிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (12.10.2023) தலைமைச் செயலகத்தில், Mphasis மற்றும் மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்கான தேசிய மையத்தால் (National Centre for Promotion of Employment for Disabled People) 28.09.2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற “உலகளாவிய வடிவமைப்பு” விருதுகள் 2023 நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்ட விருதினை மாற்றுத் திறனாளிகள் நலத்துறை முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ) சுன்சோங்கம் ஜடக் சிரு, காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்த நிகழ்வின்போது, சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் ஏ.கே.கமல் கிஷோர், “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத் தலைவர் திருமதி பூணம் நடராஜன், மேலாளர் ஏ.பிரபாகரன், கூடுதல் மேலாளர் திருமதி ஷிவானி, பேச்சு பயிற்சியாளர் திருமதி காபா நாசியா ஓமர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசின் மாற்றுத் திறனாளிகளுக்கான ‘அனைத்தும் சாத்தியம்’ அருங்காட்சியகத்திற்கு

# தேசிய மையத்தால் “உலகளாவிய வடிவமைப்பு” விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து வாழ்த்து!

**சென்னை, அக். 13-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (12.10.2023) தலைமைச் செயலகத்தில், Mphasis மற்றும் மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்கான தேசிய மையத்தால் (National Centre for Promotion of Employment for Disabled People) 28.09.2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற “உலகளாவிய வடிவமைப்பு” விருதுகள் 2023 நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்ட விருதினை மாற்றுத் திறனாளிகள் நலத்துறை முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ) சுன்சோங்கம் ஜடக் சிரு, காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.**

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் சென்னை, காமராஜர் சாலையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள “அனைத்தும் சாத்தியம்” என்ற மாற்றுத் திறனாளிகளுக்கான அருங்காட்சியகத்தை தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 6.6.2022 அன்று திறந்து வைத்தார்.

“அனைத்தும் சாத்தியம்” என்ற அருங்காட்சியகமானது மாற்றுத்திறனாளிகள் உபயோகப்படுத்தும் 200க்கும் மேற்பட்ட உதவி உபகரணங்கள் மற்றும் அவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட பொருட்கள் அங்கு வருகை புரிபவர்களுக்கு அவர்கள் தனிச்சையாக வாழ்வதற்கு ஏதுவாக காட்சிப் பொருட்களாக வைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த அருங்காட்சியகத்தில் மாற்றுத்திறனாளிகள் அணுகக்கூடிய இல்லம், வேலை செய்யும் இடத்தில் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் அவர்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு ஒய்வு நேரங்களில் பயன்படுத்தும் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத்திற்கு புதுதில்லியில் 28.9.2023 அன்று Mphasis மற்றும் மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்கான தேசிய மையத்தால் “உலகளாவிய வடிவமைப்பு” விருதுகள் 2023 நிகழ்ச்சியில் வழங்கப்பட்ட விருதினை, மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் ஏ.கே.கமல் கிஷோர், மாற்றுத்திறனாளிகள் அருங்காட்சியகத்தின் ஒருங்கிணைப்பாளர்களுடன் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வின்போது, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் ஏ.கே. கமல் கிஷோர், “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத் தலைவர் திருமதி பூணம் நடராஜன், மேலாளர் ஏ. பிரபாகரன், கூடுதல் மேலாளர் திருமதி ஷிவானி, பேச்சு பயிற்சியாளர் திருமதி காபா நாசியா ஓமர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மணப்பாறை நகரத்தில் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு!

# ரூ.178 கோடி மதிப்பீட்டில் குடிநீர்க் குழாய்கள் மாற்றப்படுகின்றன!

## சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு பதில்!

சென்னை, அக்.13-

சட்டப்பேரவையில் மணப்பாறை தொகுதியில் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண உறுப்பினர் அப்துல் சமது வலியுறுத்தினார். இதற்கு அமைச்சர் கே.என். நேரு பதிலளிக்கையில் ரூ.178 கோடி மதிப்பில் குடிநீர் குழாய்கள் மாற்றப்பட்டு குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகின்றன என்று பதிலளித்தார்.

இதுகுறித்து விவாதம் வருமாறு : -

**ப.அப்துல் சமது:** உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் என்னுடைய மணப்பாறை தொகுதிக்கு எனது கோரிக்கையை ஏற்று, சாலைகள், மருத்துவமனை கட்டடம், மழைநீர் வடிகால் உள்ளிட்ட பணிகளுக்காக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய மணப்பாறை தொகுதி காவிரி பாயக்கூடிய திருச்சி மாவட்டத்தில் இருந்தா லும் வெள்ளப்பெருக்கு காலத்தில்கூட அந்தக் காவிரி நீர் வராத ஒரு மேட்டுப் பகுதியாக மணப்பாறை தொகுதி இருக்கிறது. அந்தப் பகுதிக்குக் குடிநீர் இல்லாமல் மக்கள் அவதிப்பட்ட காலத்தில் 1996ல் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் அந்த மக்களுக்குக் குடிநீரை வழங்கினார்கள்.

அதை இந்த நேரத்தில் நான் நன்றியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இப்போது அவர் போட்டுக் கொடுத்த அந்தக் குழாய் 27 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் உடைப்பெடுத்து இன்றைக்குக் குடிநீர் கிடைக்காமல் அந்த மக்கள் அவதிப்படக்கூடிய நிலை வந்திருக்கிறது. மணப்பாறை நகரத்திற்கு மட்டும் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மறுசீரமைப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மருங்காபுரி, வையம்பட்டி, மணப்பாறை ஒன்றியம், பொன்னம்பட்டி பேரூராட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிற காரணத்தால் மிகப்பெரிய பிரச்சினை இருக்கிறது. எனவே, என்னைவிட எனது தொகுதியைப்பற்றி நன்கறிந்த நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இதைச் சீர் செய்து தருவார்களா?



**அமைச்சர் கே.என்.நேரு:** உறுப்பினர் அப்துல் சமது சொன்னது ஏற்கெனவே தலைவர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு இருந்த போது 100 ரூபாய் செலவிலே மணப்பாறை நகரம் மணப்பாறை பகுதி முழுவதும் அன்றைக்கு மருங்காபுரி தொகுதி என்று பெயர். மற்ற தொகுதிகளைக் காட்டிலும் 900 hamlets இருக்கின்ற பகுதி. 900 குக்கிராமங்கள் அடங்கிய பகுதி. அனைத்துப் பகுதிகளுக்குமே இந்தக் குடிநீரைக் கொண்டுவந்து நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்றைக்குத் தந்தார்கள்.

அது 27 ஆண்டுகாலம் ஆகிவிட்ட காரணத்தால் ஆங்காங்கே பழுதுகள் road extension, பல இடங்களிலே pipeline உடைக்கப்பட்டிருக்கிறது.

எனவே, அதனை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் நம்முடைய முதலமைச்சர் இன்றைக்கு 178 கோடி ரூபாய் அதற்காக நிதியொதுக்கி பணிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, retrofitting மூலமாக அனைத்துக் குழாய்களும் மாற்றப்படுவதற்கு நீங்கள் ரோடுக்குப் போனீர்களென்றாலே, குழாய்களெல்லாம் அங்கே கிடக்கின்றன என்பதைப் பார்த் தீர்களென்றால் தெரியும்; வேலை கள் நடந்து கொண்டிருக்கின்றன.

விரைவிலே அந்தப் பணிகளை முடித்து குடிநீர் தருகிற பணியை நாங்கள் செய்கிறோம். இதனுடைய வரலாறு என்னவென்று சொன்னால், முதலில் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போது ஒரு திட்டம் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் கொண்டுவந்தபோது மணப்பாறைக்குக் குழாய்கள் போடப்பட்டன. ஆனால், அந்தக் குழாய்கள் முழுவதும் உடைந்துவிட்டன. மீண்டும் கலைஞர் அவர்கள் வந்துதான் மணப்பாறை நகரத்திற்கே புதிய குழாய்கள் போட்டுக் கொடுத்தார்கள். எனவே, அன்றைக்குக் கலைஞர் தந்தார். இன்றைக்கு நமது முதலமைச்சர் அவர்கள் 178 கோடி ரூபாயிலே குழாய்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. விரைவிலே சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# தமிழ்நாட்டில் 16 ஐ.பி.எஸ். அதிகாரிகள் இடமாற்றம்!

சென்னை, அக்.13 -

தமிழ்நாடு அரசு நிர்வாக காரணங்களுக்காக அவ்வப்போது துறை வாரியாக அதிரடி மாற்றங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், அரசுத்துறைகளில் பணியாற்றும் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகள் அவ்வப்போது பணியிட மாற்றம் செய்யப்படுவது வழக்கமான ஒன்றுதான்.

அந்த வகையில் தற்போது, ஐ.பி.எஸ். அதிகாரிகள் 16 பேர் பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, குடிமைப்பொருள் வழங்கல் சி.ஐ.டி. பிரிவு டி.ஜி.பி. வன்னிய பெருமாள், ஊர்க் காவல் படை டி.ஜி.பி. ஆக பணியிட மாற்றம்.

சென்னை காவலர் பயிற்சி கல்லூரி ஐஜி தமிழ்ச்சந்திரன், TNUSRB உறுப்பினர் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை பெருநகர மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையராக செந்தில்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி மாநகர காவல் ஆணையராக மகேஸ்வரி நியமிக்கப்பட் டுள்ளார்.

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு பிரிவு ஐ.ஜி. ஆக ஜோஷி நிர்மல் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை வடக்கு மண்டல சட்டம், ஒழுங்கு காவல் இணை ஆணையராக அபிஷேக் தீட்சித் நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை தொழில்நுட்ப சேவைகள் பிரிவு டி.ஐ.ஜி. ஆக திஷா மிட்டல் நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை தலைமையக டி.ஐ.ஜி. ஆக ஐ.பி.எஸ். அதிகாரி சாமுண்டீஸ்வரி நியமிக்கப் பட்டுள்ளார்.

சென்னை போதைப்பொருள் தடுப்புப் பிரிவு எஸ்.பி. ஆக சாம்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ராமநாதபுரம் கடலோர பாதுகாப்பு குழும எஸ்.பி. ஆக ஹரி கிரண் பிரசாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

காத்திருப்போர் பட்டியலில் இருந்து தீபா சத்யன், தமிழக காவல்துறை நிர்வாக பிரிவு ஏ. ஐ.ஜி. ஆக நியமிக்கப்பட்டுள்ளார். தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக சுரேஷ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக சுந்தரவடிவேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக ஜெயக்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பிரபாகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக ஆக சுந்தரவதனம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு அரசு செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசின் சார்பில் 2024 பிப்ரவரியில் நடைபெறும்!

# கணித்தமிழ் 24 பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை,அக்.13 -**

**தமிழ்நாடு அரசின் 2023-2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 'தமிழ்க் கணினி பன்னாட்டு மாநாடு' நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் 'கணித்தமிழ்24' மாநாடு நடத்தப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் தமிழின் நிலை குறித்து ஆராய்தல், விவாதித்தல், புதிய சிந்தனைகளை உருவாக்குதல், இளம் திறமைகளை அடையாளம் காணுதல் உள்ளிட்ட இலக்குகளோடு பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு நடத்திட தமிழ்நாடு அரசு திட்ட மிட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் 1999-இல் 'தமிழ்இணையம்99' மாநாடு வெற்றிகரமாக நடத்திமுடிக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மீண்டும் தமிழ்நாடு அரசு இந்த மாநாட்டை முன்னெடுக்கிறது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

'தமிழ் இணையம் 99' மாநாட்டின் விளைவாக உருவானதுதான் தமிழ் இணையக் கல்விக்கழகம். உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு இணைய வழியில் தமிழ் கற்றுக்கொடுத்தல், தமிழ் நூல்களையும் இதழ்களையும் அரிய ஆவணங்களையும் மின்னுருவாக்கம் செய்தல், கணினித் தமிழை மேம்படுத்துதல் ஆகியவை தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் முதன்மையான பணிகளாகும். மேலும், மாநாட்டில் பங்குபெற்ற வல்லுநர்களின் வழிகாட்டுதலோடு 'தமிழ்99 விசைப்பலகை' உருவாக்கப்பட்டு, அரசால் அங்கீகரிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது. தமிழில் மென்பொருட்களை உருவாக்குவது தொடர்பான செயல்களைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது.

இந்நிலையில், 'தமிழ் இணையம் 99' மாநாட்டுக்குப் பிறகான காலகட்டத்தில் தொழில்நுட்பம் அடைந்திருக்கும் வளர்ச்சி அபரிமிதமானது. செயற்கை நுண்ணறிவு குறித்து கடந்த நூற்றாண்டின் இறுதியிலேயே நாம் பேசத் தொடங்கிவிட்டாலும் அண்மைக் காலத்தில்தான் அது முழு வீச்சில் களம் கண்டிருக்கிறது. எனவே, வளர்ந்துவரும் இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் தமிழுக்கான இடத்தினை வலுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இம்மாநாடு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாநாட்டின் வழியாக, தொழில்நுட்பத் துறையில் தமிழ் மொழியின் பயன்பாடு அதிகரிப்பதற்கான சூழலை ஏற்படுத்த இயலும். புதிய தலைமுறையை இதன் பக்கம் திருப்ப இயலும்.

தொழில்நுட்பத் துறையில் தமிழைப் பயன்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்துவரும் தமிழ் இணையக் கல்விக்கழகம், இந்தப் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாட்டை ஒருங்கிணைக்கும். புது யுகத்திற்கு ஏற்றாற்போல் தமிழ் மொழியும் புத்தொளி பெற்று வளர வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது. ஆங்கிலத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுவரும் Natural Language Processing Tools (NLPT), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திரவழிக் கற்றல் (Machine Learning), Machine Translation (MT), Senti mental Analysis (SA), Large Langu age Model (LLM), Automatic Speech Recognition (ASR) போன்றவற்றைத் தமிழில் உருவாக்கும் முயற்சியும் இந்த மாநாட்டின் இலக்காக இருக்கும்.

இந்தப் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு 2024 பிப்ரவரி 8, 9, 10 ஆகிய நாட்களில் சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடத்திய 'தமிழ்இணையம்99' மாநாடு நடைபெற்ற அதே நாளில் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு (கணித்தமிழ்24) கலைஞர் நூற்றாண்டில் நடைபெறவிருப்பது சிறப்பான ஒன்றாகும். தமிழ்நாட்டிலும், இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் தமிழுக்காகப் பங்களித்துவரும் அறிஞர்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் தமிழ் ஆர்வலர்களும் இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்கள். மேலும் மாநாடு தொடர்பான கூடுதல் விவரங்களை https://www.kanitamil.in என்ற இணையதளத்தில் அறியலாம்.

இந்தப் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு கீழ்க்காணும் அம்சங்களுடன் திட்டமிடப்பட்டுள்ளது:

உரைகள் மற்றும் குழு விவாதங்கள்: தமிழறிஞர்கள், மொழித் தொழில்நுட்ப வல்லுநர்கள், மொழித் தொழில்நுட்பத்தை உருவாக்கும் மற்றும் பயன்படுத்தும் நிறுவனங்களைச் சேர்ந்த ஆளுமைகள் ஆகியோர் வெவ்வேறு தலைப்புகளில் விரிவுரை வழங்குவார்கள். ஆளுமைகளுக்கு இடையேயான குழு விவாதங்களும் நடத்தப்படும். செயற்கை நுண்ணறிவு, இயந்திர வழிக் கற்றல், இயற்கை மொழிச் செயலாக்கம், மொழி மாதிரிகள், நவீன மொழித் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட தலைப்புகளில் உரைகளும் குழு விவாதங்களும் நடைபெறும்.

**ஆய்வுக் கட்டுரைகள்**: உலகெங்கிலும் கணினித்தமிழ் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுவருபவர்களிடமிருந்தும், தமிழ் மொழி மட்டுமல்லாமல் பிற மொழிகளிலும் மொழி சார்ந்த மென்பொருள் உருவாக்குவோரிடமிருந்தும் தொழில்நுட்பம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டு, புத்தகமாகத் தொகுக்கப்படும். இயற்கை மொழிச் செயலாக்கம், இயந்திர மொழிபெயர்ப்பு, பேச்சுகளைப் புரிந்துகொள்ளல், உணர்வுப் பகுப்பாய்வு உள்ளிட்ட தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெறும்.

**நிரலாக்கப் போட்டி**: இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் என இரண்டு விதமாக நிரலாக்கப் போட்டி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் போட்டியின் வழியாக இளம் தொழில்நுட்ப வல்லுநர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய வழிகாட்டுதல் வழங்கப்படுவதோடு, சிறந்த முயற்சி களுக்கான அங்கீகாரமும் வழங்கப்படும்.

**கண்காட்சி**: மொழித் தொழில்நுட்பங்கள் தொடர்பான அதிநவீனத் தயாரிப்புகள், திட்டங்கள், புதிய சிந்தனைகள் போன்றவற்றைப் பிரதி பலிக்கும் விதமாகக் கண்காட்சி அமையும். தொழில் துறையைச் சேர்ந்தவர்கள், புத்தொழில் (Startup) நிறுவனத்தினர் ஆகியோர் இதில் பங்கேற்பார்கள்.

தொழில்நுட்பத்தில் மொழியின் முக்கியத்துவம் அதிகரிக்கத் தொடங்கியிருக்கும் காலம் இது. அதன் பல்வேறு பரிமாணங்களை வெளிக்கொண்டுவரும் நிகழ்வாக இந்த மாநாடு நடைபெறும். செயற்கை நுண்ணறிவு (AI), அதிகளவில் மொழி மாதிரிகளை உருவாக்குதல் (LLM), டிஜிட்டல் உள்ளடக்க உருவாக்கம், கற்றல் கற்பித்தல் தொழில்நுட்பம், மின் ஆளுமை உள்ளிட்ட தளங்களில் நடைபெறவிருக்கும் இந்தப் பன்னாட்டு மாநாடு அடுத்துவரும் சவாலான தொழில்நுட்ப யுகத்தை எதிர்கொள்வதற்கான அடித்தளங்களை அமைத்துத்தரும். மேலும், இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் கணித்தமிழ் தொடர்பாக நடந்திருக்கும் விவாதங்கள், முயற்சிகள், முன்னெடுப்புகள் முதலிய வற்றை உள்ளடக்கிய சிறப்பு மலர் ஒன்றும் இந்தப் பன்னாட்டு மாநாட்டில் வெளியிடப்படும். இம்மாநாட்டுக்கென பிரத்யேக இலச்சினை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு முன்னெடுத்துள்ள இந்த மாபெரும் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு தமிழ் மொழியைக் காப்பதற்கும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதற்கும் ஒரு மிகப் பெரிய வாய்ப்பாக அமையும். இந்தியாவில் வேறெந்த மாநிலமும் மொழிக்காக முன்னெடுக்காத ஒரு திட்டத்தை முன்னோடியாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

---

கொடநாடு பிரச்சினை:

# தவறு செய்தவர்களுக்கு நிச்சயம் தண்டனை!

## சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, அக்.13 –

சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் தகவல் கோரலில் உறுப்பினர் ஆர்.வைத்திய லிங்கம் கொடநாடு பிரச்சினை குறித்து பேசினார்.

இதற்கு பதிலளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

உறுப்பினர் ஆர். வைத்தி லிங்கம், கொடநாடு பிரச்சினையைப் பற்றி இங்கே பேசியிருக்கிறார். தற்போது அது சி.பி.சி.ஐ.டி. விசாரணையில் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த சி.பி.சி.ஐ.டி. விசாரணையே நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தான் நடைபெறத் தொடங்கியிருக்கிறது. சிறப்புப் புலனாய்வுத் துறையின் மூலம் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விசாரணையின் முன்னேற்றம் மற்றும் தற்போது இருக்கக்கூடிய நிலவரங்களைப் பற்றியெல்லாம் தொடர்புடைய அறிக்கை விரைவிலே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கிறது. எனவே, இந்த வழக்கிலே யார், யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பது மிக விரைவிலே வெளியே வரப் போகிறது. எப்படிப்பட்ட இடத்திலே இருந்தாலும், நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக் கொள்கி றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

---

கடலூர் மாவட்ட சாலை விபத்தில்

# உயிரிழந்த கல்லூரி மாணவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 13-

கடலூர் மாவட்ட சாலைவிபத்தில் உயிரிழந்த கல்லூரி மாணவரின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, நிதியுதவி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள் நேற்று விடுத்த அறிவிப்பு வருமாறு:-

கடலூர் மாவட்டம், தேவனாம்பட்டினம் கிராமம் கடற்கரை சாலையில் 11.10.2023 அன்று மதியம் அப்பகுதியிலுள்ள கலைக்கல்லூரி மாணவ, மாணவியர் கல்லூரி முடிந்து ஷேர் ஆட்டோவில் கடலூருக்கு வந்துகொண்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாக ஆட்டோ கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் காயமடைந்த பண்ருட்டி வட்டம், சிறுவத்தூர் (அ), மணப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன், த/பெ.சரவணன் (வயது 20) என்ற மாணவர், கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த கல்லூரி மாணவர் தமிழ்ச்செல்வன் அவர்களின் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மின்துறை**

கலைஞர் 100 1924 - 2023

த.தொ.நு.மை.ந.க.எண்.சி1/2257/2023 **மறு e - ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

**To purchase 12 No's of Oracle Database Enterprise Edition Software for use of Greater Chennai Corporation with one year support** - க்கான ஒப்பம்

| பணியின் மதிப்புத் தொகை 5,66,61,792/- | ஒப்ப முன் வைப்புத் தொகை 5,66,618/- |
|---|---|

ஒப்ப படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பபுள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 30.10.2023 அன்று பிற்பகல் 3.00 மணி

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 31.10.2023 அன்று பிற்பகல் 3.15 மணி

செ.ம.தொ.இ / 5570 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்**


---

# என்றும் அண்ணாவின் அன்புத் தம்பி

# ஏ.வி.பி. ஆசைத்தம்பி !



**அ**றிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் இந்த மாபெரும் இயக்கத்தைத் தொடங்கிய போது ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள், கழகத்தின் முன்னணி வீரர்களுள் முதலிடம் பெற்றுக் குறிப்பிடத் தக்கோராய் விளங்கியவர்களில் ஒருவராக அங்கீகாரம் பெற்றிருந்தவர். ஏ.வி.பி.ஆசைத்தம்பி உள்ளிட்டோர் இடம் வகித்திருந்த வண்ணமிகு வரிசையைப் பார்த்துத்தான் அண்ணா அவர்கள், " என் தம்பிகள் ஒரு குறையும் இல்லாத தங்கக் கம்பிகள்... ஆயிரம் ஆபத்துகள் அடுத்தடுத்து வந்தாலும் - அஞ்சி ஒதுங்காது அறப்போர் ஆற்றும் அடலேறுகள்!

தீரர்கள்! தென்னாட்டை வாழ்விக்க வந்த பொன்னான வீரர்கள்!" என்று பலபடப் பாராட்டிச் சீராட்டி ஊக்கமும் உற்சாகமும் ஊட்டினார்.

"சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சமதர்மக் குறிக்கோள்,அரசியல் துறையிலே வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்றும் விடுதலை" என்று, கழகத்தின் கொள்கைக் கட்டமைப்பை வடிவமைத்து அண்ணா பிரகடனப் படுத்தினார். அதனை நெஞ்சார ஏற்றுக் கொண்டவர்கள், எதனையும் எதிர்பாராது கட்சிக்காக எந்நாளும் உழைப்பதற்கும், எந்தவிதத் தியாகத்திற்கும், தம்மைத் தயார் செய்து கொண்டவர்கள்.

**ஆழப் படர்ந்த வேர்களுடனும், வலுவான அடிமரத்துடனும், உரங் கொண்டு விளங்கும் விழுதுகளுடனும், கழகம் இன்றைக்கு, எழுந்தோங்கி நிற்கும் ஆலமரமாக - பல ஆலமரங்கள் வளர்ந்து நிறைந்து, இளந் தென்றலில் அசைந்தாடும் அழகிய தோப்பாகத் துலங்குகிறது. இப்படி ஒன்று பத்தாகவும், பத்து நூறாகவும் மேலும் மேலும் தொடர்ந்து பெருகுவதற்குப் பாடுபட்டவர்கள்,சிறைக் கொட்டடி ஏகியவர்கள், கண்ணீரும் செந்நீரும் சிந்தியவர்கள் ஏராளம், ஏராளம் ! அவர்களில் - அந்த வேர்களில் ஒருவர்தான், ஏ.வி.பி. ஆசைத்தம்பி!**

" தண்ணீர் விட்டோ வளர்த்தோம்" - கழகம் எனும் இப்பயிரைக்
"கண்ணீரால் காத்தோம்; எண்ணமெலாம் நெய்யாக
எம்முயிரின் உள்வளர்ந்த வண்ண விளக்கிது" என்ற மகாகவி பாரதியின் பைந்தமிழ் வரிகளைப் பயன்படுத்திச் சொல்வதற்கும், விரித்துரைப்பதற்கும், பொருத்தமும், பொருளும் மிக்கது நம் திராவிட முன்னேற்றக் கழகம்.கழகத்தை உயிராகவும், உணர்வாகவும் கொண்டு ஓம்பியோருள் ஒருவர்தான் ஏ.வி.பி.ஆசைத்தம்பி.

**"சித்திரச் சோலைகளே, உமை நன்கு திருத்தஇப் பாரினிலே**
**முன்னர் எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ**
**உங்கள் வேரினிலே!" என்ற பாவேந்தரின் பாட்டுத் தமிழில் விதந்தோதப்பட்டதற் கொப்பான பழம்பெரும் தோழர்களில் ஒருவர்தான் ஏ.வி.பி.ஆசைத்தம்பி!**

1924 -ஆம் ஆண்டில், விருதுநகரில், நீதிக் கட்சிக் குடும்பத்தில் பிறந்தார் ஆசைத்தம்பி - ஆம், அவரது தந்தையார் பழனியப்பன் நீதிக் கட்சியில் ஈடுபாடு உடையவராக இருந்த காரணத்தினாலே, ஆசைத்தம்பியும் மிக இளமைப் பருவத்திலேயே நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டார். அப்படி ஈர்க்கப்பட்டவர், நீதிக்கட்சியின் கருத்துகளைப் பரப்புவதற்காக விருதுநகரில் 'இளைஞர் கழகம்' என்ற அமைப்பை உருவாக்கினார்.

1942- ஆம் ஆண்டு, அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற திராவிடத் தொண்டர் படை மாநாட்டில் பங்கேற்றார்.1944ல் விருதுநகரில் நடந்த திராவிட மாணவர் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக - 1946ல் குடந்தையில் நடந்த சுயமரியாதை மாநாட்டின் தலைவராக - திராவிடர் கழகம் உருவானதற்குப் பின், விருதுநகர் நகரக் கழகச் செயலாளராக, இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளராக, மாநிலக் கழகச் செயற்குழு உறுப்பினராக - தென்தமிழ் நாட்டில் திராவிட இயக்கம் வேரூன்றிப் பரவிடப் பெரும்பணியாற்றினார்.1948ல் நடந்த திராவிடர் கழக மாநாடுகள் இரண்டிலும் திராவிட நாடு படத்திறப்பு உள்ளிட்ட முக்கிய பணிகள் வழங்கப்பட்டு, உரை நிகழ்த்தி இருக்கிறார்.

கழகம் தொடங்கியதும்,சிறப்பான பொறுப்புகளை ஏற்று நிறைவேற்றிய ஆசைத்தம்பி, 1949ல் அவர் எழுதிய ' காந்தியார் சாந்தி அடைய' என்ற 12 பக்க சிறு நூலுக்காக,1950ல் கைது செய்யப்பட்டு, கடுங்காவல் தண்டனையும், அபராதமும் விதிக்கப் பட்டதுடன், சிறை நிர்வாகத்தால் வலுக்கட்டாயமாக மொட்டையும் அடிக்கப்பட்டார். அது குறித்து அண்ணா அவர்கள், 'அகிம்சா ஆட்சியின் அழகினைப் பார்!' என்ற தலைப்பில் கட்டுரை எழுதினார்.

கழகத்தின் சார்பில் நகராட்சி, சட்டப் பேரவை, நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு வென்றார். 1957ல் சட்டப் பேரவையில் கழகத்தின் முதல் 15 உறுப்பினர்களில் ஆசைத்தம்பி ஒருவர். அண்ணா அவர்களுடன் சட்ட மன்றத்தில் அமர்ந்து பணி செய்த அரிய பெருமையும் ஆசைத்தம்பிக்கு உண்டு. இதழாசிரியராகவும், நூலாசிரியராகவும், கதை - கட்டுரை ஆசிரியராகவும்,திரைக் கதை எழுதுபவராகவும்,சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தவர் ஆசைத்தம்பி.

ஆசைத்தம்பி அவர்கள் எவ்வளவு ஆழமான சிந்தனையாளர் - தொலைநோக்குப் பார்வையாளர் என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக் காட்டு கூற வேண்டும் என்றால், 1977ல் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினராக அவர் ஆற்றிய உரைக் கருத்து ஒன்றைக் குறிப்பிடலாம்:

**"இந்தியாவின் நாடாளுமன்றத்தில் மத்திய அரசின் உள்துறை இலாகா, இந்தியாவில் பல மதங்கள் இருந்தும், இந்து ராஜ்ஜியத்தை உருவாக்க முயல்வதாக கோவிந்தன் நாயர் குற்றம் சாட்டினார். ஆனால், மத்திய அரசின் உள்துறை இலாகா, வெறும் இந்து ராஜ்ஜியத்தை மட்டுமல்ல - இந்திமொழி பேசும் இந்துக்களின் ராஜ்ஜியத்தை உருவாக்க முயலுகிறது என்று தி.மு.க.சார்பில் குற்றம் சாட்டுகிறேன்" என்று ஆசைத்தம்பி 1977ல் பேசியதின் உள்ளடக்கத்தை, இப்போது ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், இந்தி - இந்து மதம் - அகண்ட பாரதம் என்ற வெறியுணர்வு - வெறுப்பு அரசியல் வெளிப்பாடுகளின் மூலம் அறிந்து கொள்ளலாம்.**

**அதுமட்டுமல்லாமல், மற்றொரு சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தில், "இன்று வட நாட்டில் ஒவ்வொரு மாநிலத்திலும் சாதிக் கலவரங்கள் நடைபெறுவதற்குக் காரணம், தமிழ்நாட்டில் பெரியார் அவர்கள் நடத்தியது போல் ஓர் இயக்கத்தைத் தொடங்காததுதான்.உங்களுடைய ஒவ்வொரு மாநிலத்திலும் பார்ப்பனர் அல்லாதார் கட்சியைத் தோற்றுவியுங்கள்" என்று, ஆசைத்தம்பி அவர்கள் ஆர்ப்பரித்தது, காலந்தோறும் பெரியாரின் தேவை எவ்வளவு முக்கியமானது என்பதைப் பறைசாற்றுகின்றது.**

திராவிட இயக்க ஆய்வாளர் திரு க.திருநாவுக்கரசு அவர்கள், 'திராவிட இயக்கத் தூண்கள்' என்ற தமது தொகுப்பில், ஆசைத்தம்பி அவர்கள், அரசியல் போக்கினை ஆழ்ந்து சிந்தித்துக் கணித்திடும் நுட்பத்தையும், தொலைநோக்குப் பார்வையையும் கொண்டவர் என்பதை அழகாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

**1950ல் காஞ்சியில் நடைபெற்ற மாவட்டக் கழக மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றுகையில் ஆசைத்தம்பி அவர்கள், "திராவிட இயக்கத்திற்குத் தைரியமிருந்தால் தேர்தலில் நிற்கட்டும் என்று சவால் விடுகிறார்கள்.அவர்களுக்குக் கூறுகிறேன்: தேர்தலில் நிற்கத் தயார்.ஆனால் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன்.சட்டசபையைத் திராவிட இயக்கம் கைப்பற்றி விட்டால், மறுதினமே,மத்திய சர்க்காரால் சட்டசபை கலைக்கப்படும்" என்று கணித்துச் சொன்னார். இரு முறை - 1976லும், 1991லும் - இரண்டு முறையும் கலைஞர் ஆட்சி காரணமே இல்லாமல் கலைக்கப்பட்டு - ஆசைத்தம்பி அவர்களின் தொலைநோக்கு நுட்பம் நிரூபணப்படுத்தப்பட்டிருக்கிறது.**

**கழகத்தில் அண்ணாவைப் பின்பற்றி அவரைப் போலவே அழகு தமிழில் உரை ஆற்றிட முயற்சித்தவர்கள், தத்துவ மேதை டி.கே.சீனிவாசன் அவர்களைப் போல 'அண்ணாவின் எதிரொலி' எனப் பெயரெடுத்தவர்கள், கலைஞரைப் போலவே பேசியவர்கள் உண்டு.ஆனால் தந்தை பெரியார் அவர்களைப் போலப் பேசிட யாரும் முயற்சித்ததாகத் தெரியவில்லை. ஆனால் ஆசைத்தம்பி ஒருவர்தான், பெரியார் பாணியில், கடைக் கோடி மனிதனும் புரிந்துகொண்டு சிந்தித்திடும் வண்ணம், எண்ணங்களைத் தொகுத்து வரிசைப்படுத்தி, இடம் - காலத்திற்கேற்றவாறு, எளிய முறையில் உரை நிகழ்த்துவதைக் கைவரப் பெற்றவர் என்பதால், அவரை அனைவரும் "வாலிபப் பெரியார்" என்றே அழைக்க முற்பட்டனர்.**

கழகத்தின் வைரத் தூணாக, கொள்கைக் குன்றமாக, "கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்" போல, இறுதிவரை கழகத்துடனேயே ஒட்டி உறவாடி, நம் நினைவிலே நிரந்தரமாக நிலைத்திருக்கிறார் ஏ.வி.பி.ஆசைத்தம்பி! அவருக்கு நூற்றாண்டு விழா எடுக்கும் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், கழகம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து, இலட்சியப் பயணத்தைத் தொடருவது, **'திரும்பிப் பார், முன்னேறு'** என்ற கருத்தியலுக்கு, பொருத்தமான வகையிலே பொருள் கூட்டுவதாகும் !

**: கி.இராஜமாணிக்கம் :**

* * *

## பசிப்பிணியைப் போக்கும் முதல்வராகத் திகழ்கிறார் நமது முதல்வர்!

# தமிழ்நாட்டின் நிதி - ஆண்டுக்காண்டு வளர்ச்சி அடைந்து வருகிறது!

## பேரவையில் துணை நிதி நிலை அறிக்கை பதிலுரையில் - அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்!

சென்னை, அக்.13-

**பசிப்பிணியைப் போக்கும் முதல்வராக நமது முதல்வர் திகழ்கிறார் என்றும் தமிழ்நாட்டின் நிதி ஆண்டுக்காண்டு வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது என்று சட்டப்பேரவையில் துணை நிதிநிலை அறிக்கை மீதான பதிலுரையில் அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை வருமாறு :-

2023-2024 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கையை (முதல்) இந்த மாமன்றத்தில் வைப்பதற்கும், அதன் மீதான விவாதங்களுக்கு பதிலுரை அளிப்பதற்கும் வாய்ப்பினை நல்கியுள்ள தாயிற் சிறந்த தயாபரனாக தமிழ்நாட்டு மக்களினுடைய நலன் காக்கும் தனிப்பெரும் கருணைமிக்க தனிப்பெரும் தலைவர் அந்தக் கருணை உள்ளத்திற்கு சொந்தக்காரர் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாய்ப்பை நல்கியிருக்கக்கூடிய தங்களுக்கும், இந்த விவாதத்தின்மீது பங்கேற்று உரையாற்றிருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியினை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக, தமிழ் நிலத்திலே தோன்றிய பிசிராந்தையார் என்கின்ற புலவர் புறநானூற்றிலே நாட்டு மக்களுக்கான நல்லாட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான ஒரு இலக்கணத்தை வகுத்துத் தந்திருக்கிறார். ‘காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே’ என்று தொடங்கும் அந்த நெடிய பாடலின் ஊடே அவர் சொல்கிற போது,

‘அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே,

கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்’

என்று தெரிவிக்கிறார். அதனுடைய கருத்து என்னவென்றால், அறிவுடை வேந்தன் ஒருவன் அறநெறியினை அறிந்து, தன்னுடைய குடிமக்களிடத்திலே வரிப் பெறுவானேயானால், அவனது அரசு கோடிக்கணக்கான வருவாயையும், செல்வத்தையும் ஒருங்கே ஈட்டி, அவனது அரசும், ஆட்சியும் செழித்தோங்கும் என்பதாகும். பிசிராந்தையார் காட்டி சென்ற அந்த அரசின் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டான இலக்கியமாக, தமிழ்நாட்டு அரசினுடைய நிர்வாகத்தை நடத்தி, நல்லாட்சி செய்யக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதித் துறையினை செவ்வனே செழுமைப்படுத்தி, வழி நடத்திட உலகினுடைய தலைச்சிறந்த பொருளாதார வல்லுநர்கள் அடங்கிய ஒரு குழுவினை அமைத்து, அறங்கூறும் அவையினரான அவர்களது ஆலோசனைகளைப் பெற்று, இத்துறையினைச் சிறப்பாக வழி நடத்துவதால், தமிழ்நாடு ஒரு சிறப்பான நிதி நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டான ஒரு மாநிலமாக திகழ்கிறது என்பதை நான் பெருமையோடு இந்த அவையிலே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

### நிதி நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழும் மாநிலம்!

இந்த துணை மதிப்பீடுகளில், 2,893.15 கோடி ரூபாய்க்கான கூடுதல் நிதி ஒதுக்கக் கோரப்பட்டிருக்கிறது. இது இந்த ஆண்டிற்கான வரவுசெலவு திட்ட மதிப்பீடுகளின் மொத்த செலவினத்தில் சுமார் .70 சதவிகிதம் மட்டுமே என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இது அரசினுடைய முறையான நிதி மேலாண்மையை பிரதிபலிப்பதாகவும், அதற்கு எடுத்துக்காட்டாகவும் இன்றைக்கு அமைந்திருக்கிறது.

அய்யன் வள்ளுவர் குறிப்பிட்ட தைப் போல,

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த

வகுத்தலும் வல்ல தரசு”

என்கின்ற பொய்யாமொழிப் புலவருடைய வாக்குக்கிணங்க, அரசினுடைய வருவாயைப் பெருக்கிடுவதற்கும், அதை ஈட்டுவதற்கும் உரிய பல்வேறு நடவடிக்கைகளை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேற்று 110 வது விதியிலே ஒரு மகத்தான திட்டத்தை அறிவித்திருக்கிறார். வணிக வரித் துறையிலே பழைய நிலுவைகளை தீர்வு காண்பதற்குரிய சமாதானத் திட்டம். இன்றைக்கு பத்திரிகையிலே பார்த்தோமென்று சொன்னால், ஏடுகளாக இருந்தாலும், நாட்டிலிருக்கக்கூடிய வணிக பெருமக்களாக இருந்தாலும், பெருமளவிலே அனைவரும் பாராட்டியிருக்கக்கூடிய அந்த சமாதானத் திட்டம், மிக ஒரு முக்கியமான முன்னெடுப்பாக நான் இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன். அதைப்போல, வருவாயைப் பெருக்கக்கூடிய நோக்கிலே, கனிமங்களுக்கான அரசுரிமைக் கட்டணங்களை அதிகரித்தல், மோட்டார் வாகன வரிகள் மற்றும் அதற்கான அபராதங்களை அதிகரித்தல், Artificial Intelligence நுண்ணறிவுப் பயன்பாடு மற்றும் கணினி மயமாக்கல் endtoend computerization மூலம் வரி நடைமுறைகளிலே புதிய தொழில்நுட்பங்களை நாம் உருவாக்குவதன் மூலமாக வரி வருவாயினை அதிகரித்தல், சரக்கு மற்றும் சேவை வரியை வசூலித்தல், மதுபான விற்பனை, பத்திரப் பதிவு மற்றும் சுரங்கத் தொழில் ஆகியவற்றில் தரவுகளைப் பயன்படுத்துவதன் வாயிலாக, வரி வசூல் திறனை மேம்படுத்துவதன் மூலமாக நம்முடைய அரசினுடைய வருவாயினைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை நிதித் துறை இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறது.

இத்தகைய தொடர் நடவடிக்கைகளின் மூலமாக, முயற்சிகளின் விளைவாக, இந்த நிதியாண்டில் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் முறையே 10.6 சதவீதம் மற்றும் 13.78 சதவீதம் என ஆண்டுக்காண்டு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடு பதிவு செய்ய விரும்புகிறேன். 30-6-2022 முதல் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு முறை முடிவுற்றதன் விளைவாக, தமிழ்நாடு அரசுக்கு பெருமளவிற்கான வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில், சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடாக 9,603 கோடி ரூபாயை ஒன்றிய அரசிடமிருந்து, தமிழ்நாடு அரசு பெற்றிருக்கக்கூடிய நிலையில், நடப்பாண்டில் 3,533 கோடி ரூபாய் மட்டும்தான் இப்போது நாம் பெற்றிருக்கிறோம். இதன்விளைவாக, ஒன்றிய அரசின் உதவி மானியங்கள், 36.59 சதவீத அளவிற்கு நமக்கு குறைந்திருக்கிறது. சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடாக, மேலும், ஆயிரம் கோடி ரூபாய் பெறப்படும் என எதிர்பார்க்கக்கூடிய நிலையில், 2022-23 ஆம் நிதியாண்டில் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை அளித்த பிறகு, இறுதி தொகைக்கான தீர்வு எய்தப்பட்டு விடுமென்று நாங்கள் நம்புகிறோம்.

இழப்பீட்டுத் தொகையை ஒன்றிய அரசிடமிருந்து விரைவாகக் கோருவதற்கு ஏதுவாக, அந்த முதல் காலாண்டிற்குள் வருவாய்களுக்கென தனியாகவே ஒரு தணிக்கையினை ஏற்படுத்தி, அந்த நடைமுறையினுடைய அடிப்படையில் எளிதாக்கித் தர வேண்டுமென்று ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களை நான் புதுடெல்லியில் சந்தித்த போது, நேரடியாக நான் கோரிக்கைகளை வைத்திருக்கிறேன். செலவினங்களைப் பொறுத்தமட்டில், வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் ஒருபுறம் இருக்கிறபோது, அதற்கு தொடற்பற்றிருக்கக்கூடிய செலவினங்களைக் குறைப்பதற்கும், உரிய நேரத்திலே அந்த நிதியை, நம்முடைய அரசிலிருந்து விடுவிப்பதை உறுதி செய்வதன் வாயிலாக, அந்த செயலினங்களில் இருக்கக்கூடிய செயல்திறனை நாம் கொண்டுவருவதற்கும் இந்த அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. குறிப்பாக, பல திட்டங்க ளுக்கு கருவூலத்திலிருந்தே நேரடியாக பயனாளிகளுக்கு நிதியை விடுவிக்கும் வழிமுறையை இந்த அரசு புதியதாக அறிமுகப்படுத்தியிருக்கிறது. மேலும், தமிழ்நாடு பொது நிதிக் கண்காணிப்பு அமைப்பினையும், இந்த அரசு சிறப்பாக செயலாற்றி வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்!

நூற்றாண்டு கண்ட இந்த சட்டமன்றத்தைப் பொறுத்தமட்டில், இந்த நிதியாண்டு பொன்னெழுத்துகளாலே பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிதியாண்டு என்று நான் குறிப்பிட வேண்டும். ஏனென்றால், இந்த நாட்டுக்கே முன்னுதாரணமாக வழங்கக்கூடிய கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், முதலமைச்சரு டைய காலை உணவுத் திட்டம் போன்ற முத்தான திட்டங்களை இந்த அரசு இந்த நிதியாண்டு முதல் நிறைவேற்றி வருகிறது என்பதை நான் பெருமையோடு இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நாட்டினுடைய பிற மாநிலங்கள் இந்தத் திட்டங்களையெல்லாம், பின்பற்றுகின்ற அளவுக்கு மிகச் செம்மையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டங்களை வடித்தெடுத்து, நடைமுறைப்படுத்தி வருக்கிறார்கள். காலையிலே நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுகின்றபோது, பசிப்பிணி போக்கக்கூடிய மருத்துவரைப் பற்றி குறிப்பிட்டார்கள். புறநானூற்றுப் பாடலிலே அது வருகிறது.

“பசிப்பிணி மருத்துவன் இல்லம்

அணித்தோ? சேய்த்தோ? கூறுமின், எமக்கே”

என்று ஒரு புலவர் கேட்கிறார். பசிப்பிணி நீக்கக்கூடிய அந்த மருத்துவனுடைய வீடு, பக்கத்தில்தான் இருக்கிறதா? அல்லது தூரத்தில் இருக்கிறதா? என்று ஒரு புலவன் கேட்கிறான் என்று சொன்னால், சங்ககாலத்தைச் சேர்ந்திருக்கக்கூடிய அந்த குறுநில மன்னர் ஒருவர் ஏழை, எளியோருடைய பசியினைப் போக்கியதால், அந்தப் பசியினைப் போக்கிய மருத்துவராக பார்க்கப்படுகிறார். அந்தப் பசிப்பிணி போக்கிய மரபினுடைய தொடர்ச்சியாக தமிழ்ச் சமூகத்தை வழிநடத்தியிருக்கக்கூடிய தலைவர்கள் பலரும் காலந்தோறும் வறுமையினை அகற்றிடவும், மாணவர்களுடைய கல்வி நலனைப் பாதுகாத்திடவும் பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தித் தந்திருக்கி றார்கள்.

### பசிப்பிணியை போக்கிய முதல்வர்!

அந்த வகையில் திராவிட பிதாமகர் சர். பிட்டி. தியாகராயர், பெருந்தலைவர் காமராஜர்,



மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., முத்தமிழ றிஞர் கலைஞர் என பசிப்பிணிப் போக்கிய மகத்தான தலைவர்களின் வரிசையில், நமது முதலமைச்சர் அவர்களும் இணைந்திருக்கிறார் என்பதை வரலாறு என்றென்றும் நமக்குத் தெரிவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று ஆணிற்கு பெண் சரிநிகர் சமானம் என்ற சமுதாயப் பாதையில், நல்லெண்ணத்தோடு நாடே வியந்து பார்க்கும் வகையில், மகளிர் நலன் கருதி புதுமையான பல திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கக் கூடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரால், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை, முதலமைச்சர் அவர்கள் வடிவமைத்து, நடைமுறைப்படுத்தி வருவதை நாட்டு மக்கள் மனமுவந்து இன்றைக்கு வரவேற்றிருக்கிறார்கள்.

வாழ்க்கையில் எத்தனையோ இடர்பாடுகளைச் சந்தித்தாலும், தன்னுடைய குழந்தைகளின் நலன் கருதி, தன்னை உருக்கி, தன்னுடைய பிள்ளைகளின் கல்வி மற்றும் உடல் நலன்களை கருதி, காப்பதுதான் ஓர் தாய்மையின் அடையாளம்.

அதேபோன்று ஒன்றிய அரசினுடைய மாற்றந்தாய் மனப்பான்மை, உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் மந்தநிலை போன்ற அனைத்துச் சோதனைகளையும் எதிர்கொண்ட போதிலும், தமிழ் மக்களுடைய நலன் காத்திடும் “தாயுமானவராக” (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் இந்த அரசை சிறப்பாக வழி நடத்தி வந்து கொண்டிருக்கின்றார் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

## மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!

நான் பேசுகிறபோது, மாற்றாந்தாய் மனப்பான்மையோடு ஒன்றிய அரசு நடந்து கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். ஏதோ போகிற போக்கில் அதை நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால், அதற்குரிய தரவுகளையும் இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

நேரடி வரி வருவாயைப் பொறுத்தமட்டில் ஒன்றிய அரசினுடைய நேரடி வரி விதிப்பில் தமிழ்நாட்டினுடைய பங்களிப்பில் நாம் தொடர்ந்து முன்னிலையில் இருக்கின்றோம். இந்த வரி வருவாயில், நம்முடைய பங்களிப்பு முன்னிலையில் இருக்கிறது. ஆனால், அந்தப் பங்களிப்பிற்கு நிகராக நாம் வரி பகிர்வினை பெற்றிருக்கிறோமா என்பதைப் பார்க்க வேண்டும். Direct taxesல் நம்முடைய contributionஐ நாம் கொடுத்து கொண்டிருக்கிறோம். ஆனால், அதற்கு இணையாக இருக்கிற devolutionல் நமக்குக் கிடைக்கக்கூடிய வரி பகிர்வு வந்திருக்கிறதா என்று பார்த்தால் தமிழ்நாடு அதைப் பெறவில்லை.

உதாரணத்திற்கு, ஒன்றிய அரசிற்கு வரி வருவாயாக தமிழ்நாடு செலுத்தக்கூடிய ஒவ்வொரு ஒரு ரூபாய் ஒரு ரூபாய் நாம் கொடுக்கிறோம் என்று சொன்னால், அதற்கு ஈடாக 29 பைசா மட்டுமே நமக்கு திரும்ப கிடைக்கிறது. மாறாக ஒன்றிய அரசாங்கமான பாரதிய ஜனதா கட்சி ஆளக்கூடிய உத்தரப் பிரதேசம் மாநிலத்தைப் பார்த்தீர்களென்று சொன்னால், அந்த மாநிலம் செலுத்தக்கூடிய ஒரு ரூபாய் அவர்கள் கொடுக்கக்கூடிய அந்த வரிக்கு, திரும்ப அவர்களுக்கு ஈடாக கிடைப்பதைப் பார்த்தீர்கள் என்றால், 2 ரூபாய் 73 பைசா அவர்களுக்குக் கிடைக்கிறது. நமக்கு திரும்பக் கிடைப்பது வெறும் 29 பைசா மட்டுமே. ஆனால், அவர்களுக்குக் கிடைப்பது 2 ரூபாய் 73 பைசா கிடைக்கிறது.

### பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு!

நிதியாண்டு 2014-2015 முதல் 2021-2022 வரை ஒன்றிய அரசினுடைய நேரடி வரியில் தமிழ்நாட்டினுடைய பங்களிப்பு மட்டும் ரூபாய் 5.16 இலட்சம் கோடி. அதாவது நம்முடைய பங்களிப்பாக, வரி பகிர்வாக நாம் ரூபாய் 5.16 இலட்சம் கோடி கொடுத்திருக்கிறோம். ஆனால், திரும்ப நமக்கு கிடைக்கக்கூடிய வரிப் பகிர்வாக அந்தக் காலக்கட்டத்தில் நமக்கு எவ்வளவு கிடைத்திருக்கிறது என்று சொன்னால், ரூபாய் 2.08 இலட்சம் கோடி மட்டும்தான்.

இதே, பாரதிய ஜனதா கட்சி ஆளக்கூடிய மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் நிலைமை வேறாக இருக்கிறது. உத்தரப் பிரதேசம் மாநிலம் ரூபாய் 2.24 இலட்சம் கோடி மட்டுமே அவர்களுடைய பங்களிப்பு. நம்முடைய பங்களிப்பு ரூபாய் 5.16 இலட்சம் கோடி. ஆனால், நமக்கு கிடைத்தது ரூபாய் 2.08 இலட்சம் கோடி. அவர்கள் பங்களிப்பு ரூபாய் 2.24 இலட்சம் கோடியாகத்தான் இருக்கிறது. ஆனால், உத்தரப் பிரதேசம் மாநிலத்திற்கு கிடைத்த வரிப் பகிர்வு என்பது ரூபாய் 9.04 இலட்சம் கோடி என்று பார்ப்பீர்களேயானால், அவர்கள் வரி பங்களிப்பை விட, அவர்கள் பெற்றிருக்கின்ற வரி பகிர்வானது நான்கு மடங்கு அவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இதுதான் ஒரு கண்ணிலே வெண்ணெய்யும் மற்றொரு கண்ணில் சுண்ணாம்பையும் வைக்கக்கூடிய ஒன்றிய அரசின் செயல்பாடு என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. நிதிக் குழு (Finance Commission). இந்த கணக்கீடுகளை நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள் என்றால், மத்திய நிதிக் குழு(Central Finance Commission) ஒதுக்கீட்டில் தமிழ்நாடு தொடர்ச்சியாக, நாம் பெருமளவில் இன்றைக்கு நிதி இழப்பை சந்தித்து வருகிறோம். 15 வருடங்களாக தமிழ்நாட்டினுடைய பங்களிப்பிற்கு நிகராக இருக்கக்கூடிய இந்த நிதி ஒதுக்கீடு, தொடர்ச்சியாக தமிழ்நாட்டிற்கு மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. அதாவது 12வது நிதிக் குழுவில்(Twelfth Finance Commission) 5.305 சதவிகிதமாக இருந்த நிதி ஒதுக்கீடு, 15வது நிதிக் குழுவிற்கு வருகிறபோது (Fifteenth Finance Commission) 4.079 சதவிகிதமாக அது குறைந்து வருகிறது. ஆனால், Twelfth Finance Commissionல் இருக்கிறதைவிட Fifteenth Finance Commissionல் வருகிறபோது, தமிழ்நாட்டிற்கு வரக்கூடிய நிதி ஒதுக்கீடு என்பது குறைந்து கொண்டே வருகிறது.

மக்கட்தொகை கணக்கெடுப்பை பார்த்தீர்கள் என்று சொன்னால், இந்தியாவினுடைய மக்கட்தொகையில் 6.124 சதவிகிதமாக இருக்கக்கூடிய தமிழ்நாட்டிற்கு நமக்கு கிடைக்கக் கூடிய சதவிகிதம் நம்முடைய மக்கட்தொகைக்கு இணையாகவோ, நேராகவோ இல்லை.

ஆனால், அதைவிட குறைவாக 4.079 சதவிகிதமாகத்தான் நிதி ஒதுக்கீடு நமக்கு வந்திருக்கிறது. இது எந்தவகையில் நியாயம் என்ற கேள்வியைத்தான் இந்த மாமன்றத்தில் நான் உங்கள் முன்பு வைக்க விரும்புகின்றேன். இந்த divide, வடமாநிலங்களுக்கும், தென்மாநிலங்களுக்கும் இருக்கின்ற இந்த வேறுபாட்டிற்குக் காரணம், நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். இது வடமாநிலங்களுக்கு சாதகமாக அமைவதற்கு காரணம், நமக்கு இருக்கக்கூடிய census. 1971 ஆம் ஆண்டில் நாம் எடுத்த census. அன்றைக்கு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இருக்கின்றபோது, கொண்டுவந்ததற்குப் பிறகு, ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு ஒரு சமச்சீர் நிலைமை உருவாகின்றவரை, அது நடைமுறையில் இருக்கும் என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு உட்பட்டிருக்கக்கூடிய தென் மாநிலங்கள், இந்த குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மிகப்பெரிய அளவில் நிறைவேற்றியது. குறிப்பாக, தமிழ்நாடு ஒரு progressive ஆக அதைச் செய்ய வேண்டுமென்பதற்காக, அந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். 1972ல் குடும்பக் கட்டுப்பாட்டு முறையை ஏற்றுக்கொண்டதன் காரணமாக, இன்றைக்கு நாம் பழி வாங்கப்படுகிறோம் என்பதுதான் உண்மை. அதற்குப் பின்பு வாஜ்பாய் அவர்கள் காலத்தில்கூட இந்த சமச்சீர் தன்மையைத் தொடர்ச்சியாக கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற மக்கள் தொகையின் கணக்கெடுப்பை எடுக்கிற போது, இது ஒரு மிகப்பெரிய பின்னடைவை, நிதி ஒதுக்கீட்டில் நமக்கு இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்வேன்.

### பேரிடர் நிவாரண நிதியும் குறைத்து வழங்குகிறார்கள்!

அதைப்போல, பேரிடர் நிவாரண நிதியை எடுத்துக்கொண்டால்கூட தமிழ்நாடு கிட்டத்தட்ட 64.65 சதவிகிதத்தை மட்டும்தான் மத்திய அரசிடமிருந்து, ஒன்றிய அரசிடமிருந்து நாம் பெற முடிகிறது. மாறாக, 14 வது நிதிக் குழு காலத்தைவிட 15 வது நிதிக் குழு காலத்தை நீங்கள் எடுத்துக்கொண்டால், ஓர் ஒப்பீட்டுக்காக நான் சொல்கிறேன். நமக்கு எவ்வளவு கிடைத்திருக்கிறது, 64.65 சதவிகிதத்தை நாம் பெறுகிறோம். ஆனால், இந்த 15 வது நிதிக் குழு காலக்கட்டத்தில் உத்தரப்பிரதேசத்திற்கு எவ்வளவு கிடைத்திருக்கிறது என்று பார்த்தால், 214.39 சதவிகிதம். பீகார், 231.23 சதவிகிதத்தைப் பெற்றிருக்கிறது. நாம் பெற்றிருக்கின்ற சதவிகிதம் எங்கே இருக்கிறது, உத்தரபிரதேசமும், பீகாரும் பெற்றிருக்கின்ற சதவிகிதம் எங்கே இருக்கிறது. தென் மாநிலங்களின் நிலை என்ன, வட மாநிலங்களின் நிலை என்ன, இதற்கெல்லாம் யார் காரணம் என்று நீங்கள் பார்த்தீர்களென்றால், இந்த என்னுடைய விரல் ஒன்றிய அரசாங்கத்தை நோக்கித்தான் நீளுகிறது என்பதை நான் இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

### ஜி.எஸ்.டி.யிலும் பாரபட்சம்!

இதற்குப் பிறகு இன்னொரு பெரிய கொடுமை என்னவென்று கேட்டால், சரக்கு மற்றும் சேவை வரி, GST. GSTஐப் பொறுத்தமட்டில் 2017 ஜூலை 1 ஆம் தேதி GSTஐ நாம் கொண்டு வந்துவிட்டோம். GST வந்ததற்குப் பிறகு என்ன சொன்னோம். மிகப் பெரிய விஷயம், நம்முடைய நிதி சுயாட்சி, மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய நிதி சுயாட்சி, fiscal autonomy, அதை இழக்கக்கூடிய ஒரு நிலையை நாம் உருவாக்கினோம். மாநில அரசாங்கத்திற்கு இருக்கின்ற அதிகார வரம்புகள், எந்த பொருளின்மீது வரி விதிக்கலாம், எந்தளவில் அந்த வரி விகிதங்கள் அமையலாம், அந்த வரியை எப்படி பெறுவது என்பதற்கான நடைமுறைகளையெல்லாம் தீர்மானிக்கக்கூடிய மாநில அரசின் அதிகாரங்கள், அந்த அரசியல் அமைப்பு சட்டத்தினால் நமக்கு கிடைத்த உரிமைகளை, GSTக்குப் பிறகு நாம் இழந்துவிட்டோம். சரி, இழந்துவிட்டோம் என்று சொன்னவுடனே, மாநிலங்களுக்கான வருவாய் பாதுகாக்கப்பட்ட அளவிலே இருக்கும் என்கின்ற உத்தரவாதம் ஒன்றிய அரசால் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவர் என்ன சொன்னார், 2017லிருந்து 2022 வரையுள்ள 5 ஆண்டுகளுக்கு GST மூலமாக வரக்கூடிய வருவாய் இழப்புகளுக்கு நாங்கள்உங்களுக்கு இழப்பீடுகள் அளிக்கப்படும் என்று சொன்னார். 5 வருடங்கள் கொடுத்தார்கள். ஆனால், 5 வருடங்கள் அந்த இழப்பீட்டைப் பெற்றதற்குப் பிறகும் உரிய வளர்ச்சியை மாநிலங்கள் பெற்றிருக்கிறதா என்று சொன்னால், மாநிலங்கள் அந்த வருவாயை, நம்முடைய வளர்ச்சியைப் பெறவில்லை.

உண்மையிலேயே சொல்ல வேண்டுமென்றால் 2023-2024ல் நமக்கென்று இருக்கின்ற இந்த பாதுகாக்கப்பட்ட வருவாயிலிருந்து, தமிழ்நாட்டிற்கு மட்டும் GSTயால் ஏற்பட்டிருக்கின்ற வருவாய் இழப்பு என்பது இருபதாயிரம் கோடி ரூபாயாக இருக்கிறது என்பதை நான் இங்கே உங்களிடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, இந்த இழப்பீடு 2022ல் முடிந்துவிட்டது. நான் சொன்ன காரணங்களையெல்லாம் ஒன்றிய அரசிற்கு எடுத்துச்சொல்லி, இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு இந்த இழப்பீட்டினை நீங்கள் நீட்டித்துத்தர வேண்டுமென்று நான் கேட்டபோது, நம்முடைய கடுமையான நிதிச் சூழ்நிலையை எடுத்துச் சொன்னதற்குப் பிறகும், ஒன்றிய அரசாங்கம் இழப்பீட்டுக் காலத்தை நீட்டித்துத் தரவில்லை என்பதையும் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்கள், Jal Jeevan Missionலிருந்து நீங்கள் எடுத்துக் கொண்டால், அதேபோல வீடு கட்டும் திட்டம். பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம். நகர்ப்புறத்தில் இருக்கும் வீடு கட்டும் திட்டம், கிராமப் புறத்தில் இருக்கும் வீடு கட்டும் திட்டம். ஓர் உதாரணத்திற்குச் சொல்கிறேன். இப்போது நகர்ப்புறத்தில் இருக்கின்ற பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தைப் பார்த்தீர்களென்றால், ஒன்றிய அரசாங்கம் கொடுப்பது ஒரு வீட்டிற்கு 1 இலட்சம் ரூபாய்தான் ஒன்றிய அரசாங்கம் கொடுக்கின்றது. ஆனால், தமிழ்நாடு அரசாங்கம் குறைந்தபட்சம் ஒவ்வொரு பயனாளிக்கும் 7 இலட்சம் ரூபாய் இன்றைக்கு கொடுக்கின்றது. பேர் பெத்த பேர், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம். ஆனால், அந்தத் திட்டத்தில் அவர்கள் கொடுப்பது 1 இலட்சம் ரூபாய். தமிழ்நாடு அரசின்மூலம் 7 இலட்சம் ரூபாயை நாம் கொடுக்கிறோம். ஆனால், பேர் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம்.

### மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி தரவில்லை!

அதேபோல, சென்னை மெட்ரோ இரயில் திட்டம். இந்த மெட்ரோ இரயில் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் தேதி மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் 2021-2022ல் நாங்கள் இதற்கு நிதி ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் இந்த இடத்திலே பேசிக் கொண்டு இருக்கக்கூடிய இந்த நொடி வரை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ஓர் ஒதுக்கீட்டையும் ஒன்றிய அரசு செய்யவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய மாநில அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்தமான அந்த செலவையும் இன்றைக்கு அதற்காக ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதேபோல் கிராமத்தில் இருக்கக்கூடிய-- கிராமத்தில் எப்படி வீடு கட்டுவது என்று நம் அனைவருக்கும் தெரியும். ஒரு பயனாளிக்கு, அவர்கள் எந்த அளவுக்கு கொடுக்கிறார்கள்? மாநில அரசு நம்முடைய பங்களிப்பு அவர்கள் கொடுக்கும் தொகை வெறும் 72 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். நம்முடைய மாநில அரசு 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நமக்குக் கூடுதலாக, கூரைக்கான செலவையும் சேர்த்துக் கொடுக்கிறோம். இந்தத் திட்டத்தின் கீழே பயனாளிகளுக்கு வழங்கப்படும் மொத்தத் தொகையில் 70 சதவிகிதமான, ஒரு வீட்டிற்காக 1.68 இலட்சம் ரூபாயை யார் வழங்குகிறார்கள் என்று கேட்டால் தமிழ்நாடு அரசுதான் வழங்குகிறது. மீண்டும் சொல்கிறேன், இந்தத் திட்டத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கீட்டை வழங்குவது தமிழ்நாடு அரசு. அவர்கள் 72 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். நாம் 1 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாயைக் கொடுக்கிறோம். ஆனால் திட்டத்தின் பெயர் பிரதம மந்திரி கிராமப்புற வீடு கட்டும் திட்டம்.

இதுபோலத்தான் ஜல் ஜுவன் திட்டத்தில் 50:50 percentage. ஆனால் நீங்கள் பார்த்தீர்களென்று சொன்னால், மின்சார செலவு, மற்ற செலவுகளான நடைமுறைச் செலவு, பராமரிப்புச் செலவுகளையெல்லாம் எடுத்துக் கொண்டால் 45 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் ஒன்றிய அரசினுடைய பங்களிப்பு, மீதி இருப்பதையெல்லாம் மாநில அரசு கொடுக்கிறது. இதுபோல, வரிசையாக நான் சொல்லமுடியும். காலத்தினுடைய அருமை கருதி நான் தவிர்க்கின்றேன். ஆக, ஒவ்வொரு காலகட்டத்திலும் மாநில அரசினுடைய நிதி ஆதாரங்களை, ஒன்றிய அரசு தொடர்ச்சியாக வஞ்சித்துக் கொண்டு வருகிறது.

### ரயில்வே நிதி ஒதுக்கீட்டிலும் பாரபட்சம்!

இரயில்வே திட்டங்களை எடுத்துக்கொண்டால், நம்முடைய இரயில்வே திட்டங்களுக்கு இதுவரை நிதி குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 2023-2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மாநிலத்திற்கான ஒதுக்கீடு, ஒன்றிய அளவில் வெறும் 2.5 சதவிகிதம் மட்டும்தான். கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு அரசினுடைய மொத்த ஒதுக்கீடு 18 ஆயிரம் கோடி ரூபாய். இது 2023 ஆம் ஆண்டில் உத்தரப்பிரதேசத்திற்கு ஒதுக்கிய, அவர்களுடைய ஒரு வருட ஒதுக்கீடான 17,500 ஆயிரம் கோடியைவிட கொஞ்சம் கூட. நமக்கு ஐந்து வருடங்களில் வந்தது, உத்தரப்பிரதேசத்தினுடைய ஒரு வருடத்தைவிட கொஞ்சம்தான்கூட இருக்கிறது. இதை நான் எதற்கு இவ்வளவு விவரமாகச் சொல்கிறேன் என்று சொன்னால், ஒன்றிய அரசு நிதி பகிர்வில், நிதி பங்கீட்டில் எந்தளவிற்கு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது என்பதைத்தான் நான் சொல்கிறேன்.

### பசு - பால் உவமை!

நம் வீட்டில் ஒரு பழமொழி சொல்வார்கள். பசு உங்களுக்கு, பால் எங்களுக்கு. பசு மாநில அரசுக்கு; பசுவை வளர்ப்பது, பசுவைப் பராமரிப்பது, பசுவை பார்ப்பது எல்லாம் மாநில அரசு, ஆனால் பால் வாங்கிக் கொள்வது ஒன்றிய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆவி உமக்கு, அமுதபடி எமக்கு. நெய்வேத்தியம் செய்துஇந்தாருங்கள் என்று காண்பிக்கக்கூடிய ஆவி மாநில அரசுக்கு, ஆனால் அதில் இருக்கக்கூடிய அமுதபடி ஒன்றிய அரசுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்தக் காரணம்தான் நடக்கிறதே ஒழிய இது தொடர்ச்சியாக நமக்குக் கொடுக்கக்கூடிய “வஞ்சனை செய்வாரடி கிளியே” என்று பாரதியார் பாடிய இந்தப் பாடல்களுக்கு எல்லாம் ஓர் உதாரணமாக இருக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு மத்தியிலே இருக்கக்கூடிய ஒன்றிய அரசு தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மகளிர் மற்றும் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி ஒவ்வொரு நொடியும் சிந்தித்து வரக்கூடிய சரித்திர நாயகராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வழிகாட்டுதலின் படி இந்தத் துணை மதிப்பீடுகளை நான் இந்த மாமன்றத்தில் கொடுப்பதற்கு வாய்ப்பு வழங்கிய முதல்வர் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையின்மீது, உறுப்பினர்கள் மொத்தம் 44 மானியங்கள்மீது 160 வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அவற்றையெல்லாம், நான் கவனத்தோடு பரிசீலித்து இருக்கிறேன். தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து தரப்பு மக்களுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியை கணக்கில் கொண்டு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு தேவையான நிதிகளை ஒதுக்கி, அவற்றை செயல்படுத்துவதற்கான வழிமுறைகளையும் வகுத்து, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை சீரிய முறையிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. எனவே, 2023-2024 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மானியக்கோரிக்கையின் மீது, உறுப்பினர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களை நீங்கள் விலக்கிக் கொண்டு, இந்த துணை மானியக் கோரிக்கைக்கான தீர்மானங்களை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நல்வாய்ப்பினை எனக்கு வழங்கி, சீர்மிகு வழிகாட்டுதல் வழங்கியிருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையினைத் தயாரிப்பதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய நிதித் துறைச் செயலாளர் உதயச்சந்திரன் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், நிதித்துறை அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையை நிறைவுசெய்கிறேன். நன்றி, வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.

# வாலிபப் பெரியார் ஏ.வி.பி.ஆசைத்தம்பி நூற்றாண்டு விழா!

## (சில நினைவுக் குறிப்புகள்)

நேற்றைய தொடர்ச்சி...

இத்தகவலை, விருதை தி.மு.கழகத்தினர், மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டதோடு வழக்கை நடத்துவதற்கு நிதியைத் திரட்டுவதற்காக ஐந்து பேர் கொண்ட, நிதி வசூல் கமிட்டியொன்றையும் நிறுவினர். மேற்படி கமிட்டிக்குப் பொருளாளராக இருந்து பணியாற்ற தோழர் அய்யாச்சாமியும், செயலாளராக இருந்து ஆவன செய்ய தோழர் இளஞ்செழியனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேற்படி வழக்குக்கு, அண்ணாதுரை அளித்த ரூபாய் 50, முதன் முதலாக வரவு வைக்கப்பட்டது. பின்னர் ஆசைத்தம்பியின் தந்தையாரையும் மற்ற முக்கியத் தோழர்களையும் சந்தித்துவிட்டு, தகவலைப் பொதுச்செயலாளரிடம் அறிவிப்பதற்காகத் தோழர் என்.வி.என். நேராகச் சென்னைத் திரும்பினார்.


அப்பீல் வழக்கு சம்பந்தமாக, உடனிருந்து கவனித்துக் கொள்வதாகத் திருச்சி மாவட்டத் தோழர்களும், மேற்படி மாவட்ட தி.மு.க. துணைச்செயலாளர் தோழர் பராங்குசமும் அறிவித்துள்ளனர். 23ஆம் தேதி ஞாயிறு விடுமுறையாதலால், திங்களன்று, தோழர் ஆசைத் தம்பியும், மற்ற இரு தோழர்களும் சிறைச்சாலை யிலிருந்து விடுவிக்கப்பட்டனர். உரிமைப் போரில் துவக்க அத்தியாயம் ஆரம்பமாகியிருக்கிறது. கஷ்ட நஷ்டங்களைத் துச்சமென மதிக்கும் திறமை படைத்த காளைகள்தாம் நாம்! எனினும், நீதி கோரி நிற்கிறோம்! அதற்கான நடவடிக்கைகளைச் செய்வதென, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தலைமைக் காரியாலயத்தின் விருப்பையறிந்து மனமகிழ்வுடன் பொறுப்பேற்றுக் கொண்ட விருதைக் கிளைக் கழகத்தவரின் ஆர்வத்தைப் பாராட்டுகிறோம். வெற்றி பெறுவதற்கான ஏற்பாடுகளை, விரைவில் முடிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

**காந்தியாரின் பாதையில் நடப்பதாகக் கர்ஜனை யெழுப்பும் கனவான்கள் ஆட்சியில், நம்மீது வீசப் பட்டிருக்கும் அம்பு இது. சாதாரணமானதல்ல, கூட்டைத் திறந்துவிட்டு 'சிங்கமே வெளியில் வா!' என்று வேண்டு மென்றே வீண் வம்புக்கிழுப்பது. ஆகவே, நாம் நீதியின் முன் செல்கிறோம் நேர்மையைத் துணையாகக் கொண்டு!**

**உரிமைப் போரின் முதல் அத்தியாயம் ஆரம்பமாகிறது, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இயன்ற அளவு பொருளுதவி செய்யுமாறு பொதுவாக வசதி படைத் தோரையும், குறிப்பாக விருதுநகர்த் தோழர்களையும் கேட்டுக் கொள்கிறோம்."**

ஆசைத்தம்பியின் வழக்கு உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்து கொள்ளப்பட்டது. அப்பீலில், அவர் உயர்நீதி மன்றத்தால், ஜாமீனில் விடுதலையானார். இதற்குள் சுமார் இரண்டு மாதத்தில் இச்செய்தி கழகத்தை மகத்தான எழுச்சிக் குள்ளாக்கியது. காங்கிரசாரின் இச்செய்கையினால், ஆசைத்தம்பியின் புகழ் கட்சி வட்டாரங்களைக் கடந்து, தமிழகப் பொது மக்களிடை யேயும் பரவலாயிற்று.





1924–2023



ஆசைத்தம்பி இனப்பற்று மிக்கவர். தமிழர்களின் இன்னல்களைக் கண்டு சகித்துக்கொள்ள முடியாதவர். அவர், 1953ஆம் ஆண்டு பம்பாய் தாராவி பகுதிக்கு அழைக்கப்பட்டு, அங்குள்ள தமிழர்கள் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டார். அச்சமயத்தில் அவர்கள் படும் இன்னல்களைக் கண்டு கசிந்துருகி அதுகுறித்து 'திராவிட நாடு' இதழில் (01.02.1953) பின்வரும் சிறிய கட்டுரையொன்றை அவர் எழுதியிருந்தார். அதனை இங்கே அப்படியே வெளியிடுகிறோம். அக்கட்டுரைக்குக் 'கண்டேன், திகைத்தேன்' என தலைப்பிடப்பட்டிருந்தது.

'பம்பாய் தாராவி என்றால், நல்லதொரு இடமாக இருக்கும் என்று நினைத்தேன். நேரில், தாராவியைத் தரிசித்தபோது, பம்பாய் தாராவி, பாழடைந்த, இடமாக சுடுகாடு போன்று காட்சியளிக்கக் கண்டேன். ஆயிரமாயிரம் தமிழர்கள் இங்கு வாழ்கிறார்கள் என்று சொல்லுவதைவிட, தினமும் வதைகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். சென்னை மாகாணத்திலே உள்ள சேரிகளைவிட, மிகமிகக் கேவலமான மண் குடிசைகளும், கிழிந்த சாக்குகளால் ஆக்கப்பட்ட கூடாரங்களும், எட்டு அடி அகல நீளமுள்ள குடிசைகளிலேயே நான்கு பேர்களுக்குக் குறையாமல் குடியிருந்து கொண்டு, சென்னைத் தமிழர்கள் பம்பாயில் கொடுமைப்பட்டு வருகிறார்கள்.

சிறைச்சாலைகளில் உள்ள அறைகளில், நீள அகலம் அதிகமானதாகவும், காற்றோட்டமானதாகவும், சுகாதாரமாகவும் உள்ளன என்று சொல்லலாம். ஆனால், பம்பாய் தாராவியிலே, தமிழ் மக்கள் வாழும் குடிசைகள், சிறைச் சாலைகளைவிட மோசமாகக் காட்சியளிக்கின்றன. சாதாரண பஞ்சாயத்து போர்டின் நிர்வாகத்தின் கீழுள்ள கிராமம்கூட சுத்தமாக சுகமாக அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், பம்பாய் தாராவியைப் பார்க்கிறபோது, பம்பாய் கார்ப்பரேஷன், அதற்கு மேயர், கமிஷனர், அங்கத்தி னர்கள் ஆகியோர் இருக்கிறார்களா? செத்து விட்டார்களா? – என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

பம்பாய் கார்ப்பரேஷன் மனது வைத்தால் ஓட்டைக் குடிசையிலே வாழுகிற தாராவி தமிழர்கட்கு, கூட்டுறவுத் திட்டப்படி குறைந்த வாடகையில் சிறந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியும். பல நகர சபைகள், இதைச் செய்கின்றன. சென்னை கார்ப்பரேஷன், கோயம்புத்தூர் நகர சபை ஆகியவை வடநாட்டவர் என்று கருதப்படுகின்ற அகதிகட்கு, அழகான வீடு அமைத்துக் கொடுக்கவும், வேலை வாங்கிக் கொடுக்கவும், ரொக்கக் கடன் கொடுக்கவுமான காரியங்களில் ஈடுபட்டும், தாராவியில் வாழுகிற தமிழர்கட்கு பம்பாய் சர்க்காரோ கார்ப்ப ரேஷனோ தாராவிப் பகுதியில் தன் கடமையைச் செய்யத் தவறியது வருந்தத்தக்கது மட்டு மல்ல; கண்டிக்கக் கூடியதுமாகும். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் காமராசர், தாராவிக்கு வந்து விட்டுப் போயிருந்தார் என்று கேள்விப்பட்டேன்.

'மந்திரி மேக்கர்' என்று மதிக்கப்படுகின்ற காமராசர், தாராவியில் வாழுகின்ற தன் நாட்டு சகோதரர்கள் நிலைமையைப் பற்றி, பம்பாய் சர்க்காருக்காவது சென்னை சர்க்காருக்காவது அறிவித்திருந்தால் கூட, ஏதாவது நன்மை கிடைத்திருக்கும். உலகத்தில், ஒவ்வொரு இடமும் வேகமாக முன்னேறிக் கொண்டு போகும் இந்தக் காலத்திலே, தாராவி, நாளுக்கு நாள் தாழ்ந்து கொண்டே போகிறது. சென்னைத் தலைவர்களும் அரசாங்கமும் தாராவிப் பகுதியின் கேவல நிலையை மாற்ற, தக்க நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டும். தாராவியிலே வாழுகிற தமிழ் மக்களும், சாதி மத கட்சி பேதமின்றி ஐக்கியப்பட்டு ஆவன செய்ய வேண்டும்."

ஆசைத்தம்பியின் தனி அரசு இதழ், தனது பங்களிப்பை உரிய தருணத்தில் அளித்தது. இவர் 'திராவிட சினிமா' எனும் இதழையும் நடத்தினார். இவரது தனியரசு 1958 முதல் 1963 வரை நாளேடாக வெளிவந்தது. இதனைக் 'கழக தினத் தந்தி' எனப் போற்றினர். இவரது கதை சொல்லும் திறன் புனைவாற்றல் ஆகியன காரணமாகத் திரைப்படத் துறையிலும் இவர் பணியாற்றினார். மாடர்ன் தியேட்டர்ஸ் கதை இலாக்காவில் பணியாற்றிய இவர் அந்நிறுவனம் தயாரித்த ஆங்கிலத் தழுவலான ஒரு கதைக்கு உரையாடல் எழுதினார். அந்தத் திரைப் படம்தான் எம்.ஜி.ஆர். நடித்த 'சர்வாதிகாரி'! இதனைத் தொடர்ந்து இவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கதை, உரையாடல் அமைத்த 'வளையாபதி' படத்திற்கும் சில காட்சிகளை அமைத்துக் கொடுத்தார். இவ்விவரத்தை இயக்க நடிகரான வளையாபதி முத்துகிருஷ்ணன் நம்மிடம் தெரிவித்தார்.

**ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் கட்சி வாழ்க்கை என்பது மிகவும் உறுதியானது. அவர், இறுதிவரையும் கட்சி மாறாமல் பணியாற்றியவர். எத்தகைய சர்ச்சைகளையும் அவர் கட்சியினுள்ளே விவாதித்தார். ஒரு கட்டத்தில், அவரது தனி அரசு ஏட்டிலும் பகிரங்கமாகவும் எழுதினார். ஆனால், எந்தச் சூழ்நிலையிலும், மோதல்கள் – பிளவு வரை சென்ற போதும், அவர் உறுதியோடு தி.மு. கழகத்தில் தொடர்ந்தார். அறிஞர் அண்ணா இவரின் முரண்பாடுகளை அணுகிய விதத்தினை இராம.அரங் கண்ணல் தமது நினைவுகளில் குறிப்பிட்டுள்ளதை இன்றும் நாம் படிக்கலாம். அதில் அண்ணாவிடம் ஆசைத்தம்பி காட்டிய பணிவையும் நாம் அறிந்து கொள்ளலாம். கட்சிப் பங்கு கொள்ளச் செய்த அத்தனை போராட்டங்களிலும் அவர் கலந்து கொண்டு சிறை சென்றார். தி.மு.கழகம் தொடங்கப்பட்ட காலத்தி லிருந்தே அதன் முன்னணித் தலைவர்களுள் ஒருவராக வும், கட்சியின் பிரச்சாரக்குழு உறுப்பினராகவும் கட்சி வாழ்க்கையைத் தொடங்கிய அவர், கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வரை உயர்ந்தார். 'நெருக்கடி நிலை' பிரகடனம் செய்த பிறகு தி.மு.கழக ஆட்சி, முதன் முதலில் கலைக்கப்பட்டபோது 'மிசா' கைதியாக அவர் சிறையில் ஓராண்டுக்காலம் இருந்தார்.**

1957 - ஆம் ஆண்டு கழகம் தேர்தலில் ஈடுபட்ட போது, ஆசைத்தம்பி ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமன்றத்தில் அவர் எல்லா விவாதங்களிலும் கலந்து கொண்டார்; கேள்வி மேல் கேள்விகளை எழுப்பினார். 1967 இல் எழும்பூர்த் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1968-69 இல் தமிழகச் சட்டமன்றத்தில் மதிப்பீட்டுக் குழுத் தலைவராக அவர் பணியாற்றினார். 1968இல் இங்கிலாந்தில் நடந்த காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் இந்தியப் பிரதிநிதி யாக அவர் கலந்து கொண்டார். நெருக்கடி நிலைக்கு பிறகு, நாடாளுமன்றத்தில் நடைபெற்ற தேர்தலில் தி.மு.கழகத்தின் சார்பாக ஏ.வி.பி.ஆசைத்தம்பி மட்டுமே வெற்றிபெற்றார். அவர் நாடாளுமன்றத்தில் தி.மு.க.வின் குரலாக எதிரொலித்தார். அவர் நாடாளு மன்றத்தில் இறுதியாக ஆற்றிய உரையை இங்கே வெளியிடுகிறோம்:

"மத்திய அரசின் உள்துறை இலாகா, இந்தியாவில் பலமதங்கள் இருந்தும் இந்து ராஜ்யம் உருவாக்க முயல்வதாக கோவிந்தன் நாயர் குற்றம் சாட்டினார். ஆனால், மத்திய அரசின் உள்துறை இலாகா, கோவிந்தன் நாயர் கூறியதுபோல், வெறும் இந்து ராஜ்யத்தை மட்டு மல்ல; இந்திமொழி பேசும் இந்துக்களின் ராஜ்யத்தை உருவாக்க முயல்கிறது என்று தி.மு.க. சார்பில் குற்றம் சாட்டுகிறேன். இந்தியா விடுதலை பெற்றதும், சுதந்திர மதமதப்பில், அனைவரும் இருந்த நேரத்தில் 'இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி' என்ற அரசியல் சட்டத்தை உருவாக்கிவிட்டனர்.

இந்தி ஆட்சி மொழியாக பவனிவர ஆரம்பித்தவுடன், இதை அனுமதித்தால், இந்தி ஏகாதிபத்தியம் உருவாகிவிடும் என்றும்; ஜனநாயக சமதர்மக் குடியரசுக்கே இடமில்லாமல் போய்விடும் என்றும் கூறி, இந்தியை எதிர்த்த முதல் நாடு நான் சார்ந்துள்ள தமிழ்நாடுதான்! எட்டு வீரர்கள் உயிரோடு தங்களைத் தாங்களே எரித்துக் கொண்டு இந்தியை எதிர்த்தனர். ஆயிரக்கணக்கில் சிறை சென்றோம். இங்கே, அப்போது அமைச்சர்களாக இருந்த சி.சுப்பிரமணியமும் ஓ.வி. அழகேசனும் தங்களது எதிர்ப்பைக் காட்டினர். இதன் பிறகாவது, 'இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரை, ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்கும்' என்று பழைய பிரதமர் பண்டித நேருவின் உறுதிமொழி காப்பாற்றப்பட்டதா ? இல்லவே இல்லை! 1975 ஜூன் 25 இல், திருமதி இந்திரா காந்தியால் அவசர நிலைப் பிரகடனம் அறிவிக்கப்பட்ட அடுத்த நாளே இந்தியை எங்கும் புகுத்த உள்துறை இலாகாவில் இந்திக்கென்றே ஒரு தனி இலாகா பெரிய அளவில் அமைக்கப்பட்டுச் செயல்பட ஆரம்பித்தது.

**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க எழுத்தாளர்



இதன் விளைவு, இன்று வட இந்தியாவிலுள்ள வங்கிகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் இந்தியில் மட்டுமே உள்ளன. உள்துறை இலாகாவின் இத்தகைய செயலால் இந்தி வெறியர் களுக்கு தைரியம் ஏற்பட்டு, குடியரசுத் தலைவரே அவமானப்படுத்தப்பட்டுள்ளார். சமீபத்தில் குடியரசுத் தலைவர் அவர்கள் இரண்டொரு பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட போது, அவர் முன்னிலையிலேயே இந்தி மொழியில் பேசி அவரை வேதனைப்படுத்தி, ஆத்திரப்பட வைத்தனர்.

உள்துறை இலாகாவின் முறையற்ற செயலால், இந்தியக் குடியரசுத் தலைவரே இரண்டாந்தர பிரஜை யாகத் தாழ்த்தப்பட்டு விட்டார். இந்த நிலை நீடித்தால், இந்தி இந்தியா, இந்தி பேசாத இந்தியா என்று நாடு இரண்டு துண்டாகும் நிலை ஏற்படும் என்று எச்சரிக்கிறேன். எனவே, இந்தியாவைக் காப்பாற்ற தேசிய ஒருமைப்பாட்டை நிலைநாட்ட, நேருவின் உறுதி மொழியை,



உள்துறை இலாகா உடனே அமுல்படுத்த முன்வர வேண்டும். நேருவின் உறுதிமொழி அமுல் படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க, ஒரு நாடாளுமன்றக் குழு அமைக்கவேண்டும். அந்தக் குழுவில் இந்தி பேசாத பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே அங்கம் வகிக்க வேண்டும்.

ஆசைத்தம்பியின் கட்சி வாழ்க்கை –அவரது உறுதி மிக்க போக்கு அனைவராலும் பாராட்டப் பெற்ற ஒன்றாகும். 1950 இல் காஞ்சியில் செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. மாநாட்டை தொடங்கி வைத்து பேசுகிறபோது அவர் எந்த உறுதியில் பேசினாரோ, அதைவிடப் பன்மடங்கு உறதியோடு கோவை தி.மு.க. 5 ஆவது மாநில மாநாட்டில் (1975) அவர் பேசினார். 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், ஆசைத்தம்பி, வெற்றி வாய்ப்பை இழந்தார். ஆனால், முதல்வரான கலைஞர் அவர்கள், அவரை சுற்றுலா வாரியத் தலைவராக நியமனம் செய்தார். சுற்றுலா வாரியத்தின் மூலமாக வெளிநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் திட்டங்களை வகுத்து செயலாற்றினார்.

**ஆசைத்தம்பி, ஒரு பத்திரிகையாளராக, எழுத்தாளராக, சிறந்த பேச்சாளராக, திரைக்கதை அமைக்கும் வளமான உரையாடல் ஆசிரியராக, நகரமன்ற உறுப்பினராக, சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக பொது வாழ்வில் உயர்ந்து கொண்டே சென்றவர். பள்ளியிறுதி வகுப்பே படித்தாலும், தமது ஆற்றலை அவர் வளர்த்துக் கொள்வதில் எப்போதும் முனைப்பாக இருந்தவர். தன்னம்பிக்கை, விடாமுயற்சி, உறுதி ஆகிய முக்குணங்களை, அவர் இயல்பாக பெற்றிருந்தார். தி.மு.கழகத்தின் சார்பாக, ஒற்றைக்குரல் மனிதராக அவர் நாடாளுமன்றத்தில் விளங்கினார். இயற்கை அக்குரலையும் அக்கட்டத்தில் நம்மிடமிருந்து பிரித்தது மிகுந்த வேதனையான ஒன்றாகும்.**

ஆசைத்தம்பி அவர்களது மரணம், யாரும் எதிர்பாராமல் நடந்தேறி விட்டது. அவர் தமது மனைவியார் பரமேஸ்வரி அம்மையாருடன் அந்தமான் தீவுகளில் கழக நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதற்காக விமானத்தின் மூலம், 6-4-1979 மாலை அந்தமான் போர்ட் பிளேயர் விமான நிலையத்தில் இறங்கினார். சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டார். பிறகு, கழகக் கொடியை ஏற்றி வைத்துவிட்டு, தொழிலாளர் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அப்போது அந்நிகழ்ச்சியிலிருந்து கொஞ்ச தூரம் நடந்துவரும் போது, 'சற்று களைப்பாக இருக்கிறது. கண்ணை மறைப்பதுபோல் தெரிகிறது' என்று தம் மனைவியாரிடமும் மற்றவர்களிடமும் தெரிவித்தார். ஆனால், உண்மை என்னவென்றால், அன்று காலையிலேயே (6-4-79) அவருடைய தலையில் உள்ள இரத்தக் குழாய் சிறிதளவு வெடித்து, அது அவருக்கே தெரியாமல் அவர் கண்ணை மறைக்கும் அளவிற்கு ஆகிவிட்டது.

இவ்வளவு வேதனைகளும் அவருக்கு எந்தவித 'வலியுமில்லாமல்' நடந்தேறி இருக்கிறது. உடனே மருத்துவ மனைக்கு அவரை அழைத்துச் சென்று சேர்த்தார்கள். ரத்தநாளம் வெடித்திருக்கிறது; இங்கே யுள்ள மருத்துவமனை வசதி போதாது, திரும்ப அழைத்துச் செல்வதுதான் நல்லது என்று டாக்டர்கள் கூறினார்கள், மருத்துவ வசதி இல்லாத இடத்தில் சிக்கிக் கொண்டோமே என அவர் மனைவியிடத்திலே வருந்தினார். அழைத்துச் செல்லப் பட்ட அதே மருத்துவ மனையில் 7-4-1979 இரவு 8.00 மணியளவில் ஆசைத்தம்பி இயற்கை எய்தினார்.

அவரது உடல் அந்தமானிலிருந்து சென்னைக்கு கொண்டு வருவதற்கு பெரிய பிரச்சினையாக இருந்தது. 10-4-1979 காலைதான், சென்னைக்கு விமானத்தில் உடலைக் கொண்டு வந்து பொது மக்களின் பார்வைக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டது. கழகத் தலைவர், பொதுச்செயலாளர், இதர தலைவர்கள் அனைவரும் விமான நிலையம் சென்று உடலைப் பெற்றுக் கொள்ளக் காத்திருந்தனர். அன்று மாலையே, ஆசைத்தம்பியின் இறுதிப் பயணம் முடிந்தது.

கலைஞர் அவர்கள், ஆசைத்தம்பியின் மறைவு குறித்து தமது இரங்கற் செய்தியில் "தலையில் பேரிடி வீழ்ந்து விட்டது போன்று அதிர்ச்சிக்கு ஆளாகியிருக்கிறேன்! தன்மான இயக்கத்தின் தளபதிகளில் ஒருவர், தி.மு.கழகத்தின் வலிமைமிக்க தூதர்; நிலைகுலை யாத கொள்கை நெஞ்சம் கொண்டவர், ஐயாவின் தொண்டர், அண்ணாவின் அருமைத் தம்பி, ஐயோ! எங்கள் ஆசைத்தம்பி போய்விட்டார்! அவர் நாவசைந்தால் நாடதிர வேங்கையின் முழக்கமன்றோ கேட்கும்?

அரிமா என நிமிர்ந்து நின்று, மேடைகளில் அவர் அடுக்கடுக்காக எடுத்து வைத்த வாதத் திறமையில் வயப்படாதவர் யாருண்டு? எத்தனையோ கருத்து வேறுபாடுகள், இருப்பினும், அவற்றை பேசித் தீர்த்துக் கொண்டு அன்று முதல் இன்று வரையில் கழகத்தின் கட்டுக் கோப்புக்கு இம்மியளவு ஊனமும் ஏற்படாமல் காத்து வந்த என் ஆருயிர் உடன்பிறப்பை இழந்துவிட்டேனே!" என்று குறிப்பிட்டிருந்தார்.

பேராசிரியர் ஆசைத்தம்பியைப் பற்றி குறிப்பிடும் போது, 'ஆசைத் தம்பியைப் போல இன்னொருவரை ஈடாகச் சொல்ல முடியாது' எனக் குறிப்பிட்டிருந்தார்.

1989-90ஆம் ஆண்டுகளில் முரசொலிக்காக ஆசைத்தம்பியைப் பற்றி நாம் எழுதினோம். அப்போது சிலவிவரங்களைத்தெரிந்துகொண்டோம். அந்தக் கட்டுரையின் திருத்தப்பட்ட வடிவமே இக்கட்டுரை. ஆசைத்தம்பியின் மனைவி பரமேசுவரி அம்மையார் இப்போது இல்லை. அக்.13ஆம் தேதி நடைபெறும் நிகழ்ச்சிக்காக நமது தோழர்கள் ஆசைத்தம்பியின் மகன் சௌந்திர பாண்டியனைச் சந்தித்து உள்ளனர். இன்று கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. அக்கூட்டத்தில் ஆசைத்தம்பியின் மகன் சௌந்திர பாண்டியன் கலந்து கொள்கிறார். ஆசைத்தம்பியின் இன்னொரு மகன் காந்தியும் ஒரு மகளும் இப்போது உயிருடன் இல்லை.

ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் நூற்றாண்டு தொடக்க விழாக் கொண்டாடப்படுகின்ற இந்நேரத்தில் கொள்கையிலும் இயக்கத்தின் மீதும் அவர் எவ்வளவு பற்று உடையவராக இருந்து மறைந்து இருக்கிறார் என்பதினை ஒவ்வொரு தோழரும் நினைவு கூர்ந்து அவரைப் போற்ற வேண்டும். வாழ்க ஆசைத்தம்பியின் புகழ்!

●

ஓமன் நாட்டு கடல் பகுதியில் மீன்பிடித்தபோது

# உயிரிழந்த குமரி மாவட்ட மீனவர் குடும்பத்திற்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 13-

ஓமன் நாட்டுக் கடல் பகுதியில் மீன் பிடிக்கும்போது உயிரிழந்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தாலுகா, ஏழுதேசம் சின்னத்துறை மீனவ கிராமத்தைச் சேர்ந்த மீனவர் எல்.லெரின்ஷோ, த/பெ. கிளாரன்ஸ் என்பவர் 9.9.2023 அன்று ஓமன் நாட்டின் ஆழ்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக படகிலிருந்து தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த மீனவர் எல். லெரின்ஷோ அவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

காலிப்பணியிடங்கள் நிரப்புதல் - வாரிசுதாரர்கள் பணி நியமனம்!

# விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்!

சென்னை, அக்.13-

முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து சேவைகளை மேம்படுத்திட ஏதுவாக காலிப்பணியிடங்களை நிரப்புதல், கருணை அடிப்படையிலான வாரிசுதாரர்களை பணி நியமனம் செய்தல், ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான பணப்பலன்களை வழங்குதல் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்துதல் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும்-என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், 10.10.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்து, போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துத் துறை சிறப்புச் செயலாளர் தி.ந.வெங்கடேஷ், அனைத்துப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு (PTCS) மேலாண் இயக்குநர், சாலை போக்குவரத்து நிறுவன இயக்குநர் மற்றும் போக்குவரத்துத்துறை தலைவர் அலுவலக உயர் அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இவ்வாலோசனைக் கூட்டத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சர், பொதுமக்களுக்கு பேருந்து சேவையினை நிறைவாக அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன. குறிப்பாக, இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் குறைந்த பயண கட்டணத்தில் பேருந்து சேவையினை வழங்கி வருகிறது.

கொரோனா பெருந்தொற்று தாக்கத்தினால் ஏற்பட்ட நிதி நெருக்கடி தொடர்ந்த போதிலும், போக்குவரத்து சேவையினை சிறப்பாக செய்தும், பயண கட்டணத்தை உயர்த்தாமலும் சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது. முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து சேவைகளை மேம்படுத்திட ஏதுவாக, 1,619 காலிப்பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதல் கட்டமாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள 685 ஓட்டுனருடன் நடத்துநர் காலிப்பணியிடங்களை நிரப்ப எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து விரைவுபடுத்த அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

சென்னை - கீழ்ப்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில்

# மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு வாகனங்கள்!

## நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு கொடியசைத்து துவக்கி வைத்தார்!

சென்னை, அக். 13 -

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு நேற்று (12.10.2023) சென்னை கீழ்ப்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில், மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வினை பொதுமக்களிடையே ஏற்படுத்திடும் வகையில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

நீர் மேலாண்மை இயக்கத்தின் கீழ், நீராதாரம் காத்தல், மழைநீர் சேகரிப்பு, பாரம்பரிய ஏரி ஆதாரங்கள் / ஏரிகளை புதுப்பித்தல், நீர்நிலை மேம்பாடு, மறு பயன்பாடு, ஆழ்துளைக் கிணறு மீள் நிரப்புதல் ஆகியவற்றின் கீழ் பல்வேறு நடவடிக்கைகளை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக வடகிழக்குப் பருவமழை துவங்கும் முன்னர் அரசு அலுவலகங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் உள்ள மழைநீர் கட்டமைப்புகளை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், குடியிருப்புகள், தனியார் மருத்துவமனைகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், பள்ளி, கல்லூரி வளாகங்கள் மற்றும் வணிக வளாகங்களில் மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகள் அமைப்பதற்கும், ஏற்கனவே உள்ள மழைநீர் கட்டமைப்புகளை புனரமைப்பு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்த வருடம் பொதுமக்களிடையே மழைநீர் சேகரிப்பின் அவசியம் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரித்தல் மற்றும் கட்டமைப்புகளை புனரமைப்பு செய்தல் போன்றவை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையில் சென்னை குடிநீர் வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சென்னை மாநகர பேருந்துகள், சென்னை குடிநீர் வாரியத்தின் ஒப்பந்த அடிப்படையிலான குடிநீர் விநியோக லாரிகள் மற்றும் வாரியத்தின் வாகனங்களில் மழைநீர் சேகரிப்பு முறைகள் மற்றும் பராமரிப்பின் முக்கியத்துவம் குறித்த Stickers காட்சிப்படுத்தப்படும். மேலும், மெட்ரோ ரயில்கள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் பேருந்து நிறுத்தங்கள், வணிக வளாகங்கள் ஆகியவற்றில் மழைநீர் சேகரிப்பு தொடர்பான விளம்பர பதாகைகள் வைக்கப்படும்.

சென்னை குடிநீர் வாரியத்தின் அனைத்து நுகர்வோர்களுக்கும் மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்த குறுஞ்செய்தி வாட்ஸ்அப் (whatsapp) மூலமாக அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. FM சேனல்கள் மூலம் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு தகவல்கள் வெளியிடப்படும். மேலும், மழைநீர் சேகரிப்பு விழிப் ப்புணர்வு மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிப்பது தொடர்பாக கூடுதல் விவரங்கள் பெறுவதற்கு பொதுமக்கள் தொலைபேசி எண். 28458899ஐ தொடர்பு கொள்ளலாம். சென்னை குடிநீர் வாரியத்தில் தலைமை அலுவலகத்தில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு மற்றும் விவரங்கள் தெரிவிப்பதற்காக சிறப்பு பிரிவு செயல்படும். மேலும் கூடுதல் விவரங்களுக்கு சென்னை குடிநீர் வாரியத்தின் இணையதள முகவரி https://cmwssb.tn.gov.in, முகநூல் https://www.facebook.com/CMWSSB, https://twitter.com/CHN_Metro_Water, இன்ஸ்டாகிராம் https://www.instagram.com/chennaimetrowater என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

விடுமுறை நாட்களில் சென்னையில் உள்ள பிரதான சாலைகளில் மழைநீர் சேகரிப்பு குறித்த கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வினை மாணவர்களிடையே ஏற்படுத்திடும் வகையில் கல்லூரி மாணவர்களைக் கொண்டு மாரத்தான் நடத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வின் மூலம் மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை பொதுமக்களிடையே கொண்டு செல்வதில் சென்னை குடிநீர் வாரியம் பெரும்பங்காற்றி வருகிறது. இந்நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கி மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை உணர்ந்து மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை முறையாக பராமரித்திட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத்தலைவர் கு.பி.ஜெயின், 101வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.விட்டல்டா கோவிந்தராஜ், சென்னை குடிநீர்வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செயல் இயக்குநர் செ.சரவணன், பொறியியல் இயக்குநர் எம்.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமைப் பொறியாளர் இரா.சிவமுருகன், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இன்று - சென்னையில் நடைபெறுகிறது! கழக முன்னாள் துணைப் பொதுச் செயலாளர்

# 'வாலிபப் பெரியார்' ஏ.வி.பி.ஆசைத்தம்பி நூற்றாண்டு விழா!

## திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

### பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமை! அமைச்சர் பி.கே.சேகர்பாபு வரவேற்புரை! தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை!

**சென்னை, அக். 13-**

**"வாலிபப் பெரியார்" என கழகத்தவரால் அன்போடு அழைக்கப்பெற்றவரும், கழக முன்னாள் துணைப் பொதுச் செயலாளரும், கழகம் வளர்த்த மூத்த முன்னோடியுமான ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழா, சென்னையில் இன்றைய தினம் நடைபெறுகிறது.**

**கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றுகிறார்.**

இந்நிகழ்வு பற்றிய விபரம் வருமாறு:-



திராவிட முன்னேற்றக் கழக மூத்த முன்னோடிகளில் ஒருவர், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், இயக்கத்தின் சிங்கம், கழகத்தின் கருவூலம், தந்தை பெரியாரின் மாணவர், தன்மானப் பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புத்தம்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற தோழர், கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில், சட்டப் பேரவை உறுப்பினராகவும்; பின்னர் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு கழகக் கொள்கையினை பாராளுமன்றத்தில் ஓங்கி ஒலித்தவர், பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதிபலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலே வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட "வாலிபப் பெரியார்" என்று கழக நிர்வாகிகள், தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர், ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள்!

நெருக்கடி நிலை காலக்கட்டத்தில் 'மிசா கைதியாக' ஓராண்டு சென்னை மத்திய சிறையில் இருந்த பெரும் தியாக வரலாற்றுக்கும் உரியவர், ஆசைத்தம்பி அவர்கள்.

அப்பெருமகனாரின் நூற்றாண்டு விழா, தி.மு.க. தலைமைக் கழகம் சார்பில், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.வின் நிகழ்ச்சி ஏற்பாட்டில், இன்றைய தினம் (13.10.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 5.30 மணியளவில், சென்னை - பாரிமுனை இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெறுகிறது.

இம்மகத்தான நிகழ்வுக்கு எழிலான ஏற்பாடுகளைச் செய்துள்ள, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, விழாவில் வரவேற்புரையாற்றுகிறார்.

கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., விழாவிற்கு முன்னிலை வகிக்கிறார். கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள், விழாவிற்குத் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்வில் - கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, 'வாலிபப் பெரியார்' ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றுகிறார். துறைமுகம் மேற்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் - ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் புதல்வர் சௌந்திரபாண்டியன் உள்ளிட்ட குடும்பத்தினரும், கழக முன்னோடிகளும், நிர்வாகிகளும், தோழர்களும் கலந்து கொள்கிறார்கள்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. - இந்நிகழ்வுக்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.



நேற்று (12.10.2023) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு சென்னை குடிநீர் வாரிய கீழ்ப்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகம் அருகில், மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு தொடர்பான வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், நிலைக்குழு தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, 101–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.விட்டல்டா கோவிந்தராஜ், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செயல் இயக்குநர் செ.சரவணன், பொறியியல் இயக்குநர் எம்.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமைப் பொறியாளர் இரா. சிவமுருகன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தொகுதி பார்வையாளர்கள் ஹெலன் டேவிட்சன் - வசந்தம் ஜெயக்குமார் சிறப்புரை!

# நெல்லை மாநகரக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு! சு.சுப்பிரமணியன் அறிக்கை!

நெல்லை, அக்.13 -

நெல்லை மாநகர கழக செயல்வீரர்கள் கூட்டம் நெல்லை டவுன் லெட்சுமி மகாலில் வருகிற 16.10.2023 - திங்கட்கிழமை மாலை 5 மணி அளவில் நெல்லை மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் டி.பி. எம்.மைதீன்கான் தலைமையில் தச்சை பகுதி செயலாளர் சு.சுப்பிரமணியன், பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லத்துரை, மேலப்பாளையம் பகுதி செயலாளர் துபாய் சாகுல், மாநகர துணை செயலாளர் அப்துல்கையூம், நெல்லை மத்திய மாவட்ட விவசாயி அணி அமைப்பாளர் பொன்னையாபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி வரவேற்புரையாற்றுகிறார் என நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

இந்நிகழ்வில் மாநில மகளிர் அணி செயலாளர் பாளை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் ஆகியோர் பங்கேற்று ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

ஆகவே மாவட்ட, மாநகர, மாநில கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாநகரப் பிரதி நிதிகள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் கழக சொந்தங்கள் அனைவரும் தவறாமல் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நிகழ்ச்சி நிறைவில் 27 வது வட்ட செயலாளர் கேபிள் குமரேசன் நன்றியுரையாற்றுகிறார்.

**பொருள்:** வருகிற 2024 நாடாளுமன்றத் தேர்தல் பணி ஆற்றுவது

வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் முகாம் நவம்பர் மாதம் (04.11.2023, 05.11.2023 மற்றும் 18.11.2023, 19.11.2023)

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவை (நவம்பர் 27) கொண்டாடுவது சம்பந்தமாக. டிசம்பர் 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெறும் கழக இளைஞர் அணி மாநாட்டில் கலந்து கொள்வது.

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் நடத்த உள்ள "மக்களைதேடி தி.மு.க." நிகழ்வு குறித்து. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# தமிழ்நாடு சட்டப்பேரவையில் திருக்குறள்



சென்னை, அக். 13 -

தமிழ்நாடு சட்டப் பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2023) படித்த திருக்குறளும் - அதற்கான 'கலைஞர் உரை'யும் வருமாறு:-

**"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்**
**வாழ்நாள் வழியடைக்கும் கல்."**

**கலைஞர் உரை** : பயனற்றதாக ஒருநாள்கூடக் கழிந்து போகாமல், தொடந்து நற்செயல்களில் ஈடுபடுபவருக்கு வாழ்க்கைப் பாதையைச் சீராக்கி அமைத்துத் தரும் கல்லாக அந்த நற்செயல்களே விளங்கும்.

# 9 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இடமாற்றம்!

## கரூர், தூத்துக்குடி, திருவள்ளூருக்கு புது மாவட்ட ஆட்சியர்!

சென்னை, அக்.13-

தமிழ்நாட்டில் 3 மாவட்ட ஆட்சியர்கள் உள்பட 9 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் 9 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. தூத்துக்குடி, கரூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களின் புதிய ஆட்சியர்களை நியமித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி ஆட்சியர் செந்தில் ராஜ் சிப்காட் நிர்வாக இயக்குநராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திருவள்ளூர் ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், சென்னை மாநகர போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநராக மாற்றம்.

கரூர் ஆட்சியர் பிரபுசங்கர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார். செங்கல்பட்டு துணை ஆட்சியர் லட்சுமிபதி, தூத்துக்குடி ஆட்சியராக நியமிக்க ப்பட்டுள்ளார். நகர்ப்புற வளர்ச்சி மேலாண்மை வாரிய இணை நிர்வாக இயக்குநர் தங்கவேல், கரூர் ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ளார். சிப்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சுந்தரவள்ளி வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் ஆணையராக இருந்த வீரராகவா, தொழிற் கல்வி துறையின் ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார். திருப்பூர் மாவட்ட துணை ஆட்சியர் ஸ்ருதஞ்சய் நாராயணன், விழுப் புரம் மாவட்ட கிராமப்புற மேம்பாட்டு ஏஜென்சியின் திட்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். வேலூர்மாநகராட்சி ஆணையர் ரத்தினசாமி, ராம்நாதபுரம் மாவட்ட கிராமபுற மேம்பாட்டு ஏஜென்சி யின் திட்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

## தி.மு.க. வழக்கறிஞர் அணி

# வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், கோவை, நாமக்கல், திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் - மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம், நாளை (14.10.2023 - சனிக்கிழமை), காலை 11.00 மணியளவில் சேலம், மாமங்கம், மகேந்திரா கார் ஷோரூம் எதிரில் உள்ள "ஒட்டல் ராடிசனில்" நடைபெறும்.

இக்கூட்டத்தில் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை மாவட்ட அமைப்பாளர் செய்திடுவதோடு, அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதி செய்திட வேண்டும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் - 12.10.2023

**என்.ஆர்.இளங்கோ எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இராயபுரம் ப. பொன்னுரங்கம்

## அக்டோபர் 13 (1989)



பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்க கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்தவர்.

இராயபுரம் பகுதிக் கழகச் செயலாளராகவும், கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற அறப்போராட்டம், விலைவாசி உயர்வு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1986ஆம் ஆண்டு மத்திய அரசின் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அரசியல் சட்டப்பிரிவை தீயிட்டு எரித்ததால் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல்

## இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு அனைத்துக் கழக மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் மண்டலம்–5, மண்டலம்–6 மற்றும் மண்டலம்–7–ல் உள்ள மாவட்டக் கழகங்களில் மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் கீழ்க்கண்டவாறு நடைபெறுகின்றது.

திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகங்களுக்கு வருகிற 16.10.2023 திங்கள்கிழமையும், கரூர், பெரம்பலூர், அரியலூர் மாவட்டக் கழகங்களுக்கு வருகிற 17.10.2023 செவ்வாய்க்கிழமையும், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், மாவட்டக் கழகங்களுக்கும், காரைக்கால் மாநிலத்துக்கும் வருகிற 18.10.2023 புதன்கிழமையும், தஞ்சாவூர் மத்திய, தஞ்சாவூர் வடக்கு, தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகங்களுக்கு 19.10.2023 வியாழக்கிழமையும், புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகங்களுக்கு 20.10.2023 வெள்ளிக்கிழமையும், நேர்காணல் நடைபெறும். விண்ணப்பித்தவர்கள் அனைவரும் நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | கழக மாவட்டம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | திருப்பூர் தெற்கு | 16/10/2023 | காலை 9.00 மணி | கலைஞர் அறிவாலயம், தாராபுரம் சாலை, பழவஞ்சிப்பாளையம், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகம். |
| 2 | திருப்பூர் வடக்கு | 16/10/2023 | மதியம் 2.00 மணி | ஜெகா கார்டன் முத்துகிருஷ்ணன் திருமண மண்டபம், அங்கேரிப்பாளையம், வெங்கமேடு, வி.கே.அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில், திருப்பூர். |
| 3 | கரூர் | 17/10/2023 | காலை 9.00 மணி | ஆர்த்தி அழகம்மை மால், திண்ணப்பா தியேட்டர் அருகில், கரூர். |
| 4 | பெரம்பலூர் | 17/10/2023 | மதியம் 2.00 மணி | மாவட்டக் கழக அலுவலகம், பெரம்பலூர். |
| 5 | அரியலூர் | 17/10/2023 | மாலை 4.00 மணி | |
| 6 | மயிலாடுதுறை | 18/10/2023 | காலை 9.00 மணி | சிக்நேச்சர் மினி ஹால், சீர்காழி சாலை, நாங்குடி, மயிலாடுதுறை. |
| 7 | நாகப்பட்டினம் | 18/10/2023 | மதியம் 12.00 மணி | |
| 8 | காரைக்கால் மாநிலம் | 18/10/2023 | மதியம் 2.00 மணி | |
| 9 | திருவாரூர் | 18/10/2023 | மதியம் 3.00 மணி | |
| 10 | தஞ்சாவூர் மத்திய | 19/10/2023 | காலை 9.00 மணி | கலைஞர் அறிவாலயம், தஞ்சாவூர். |
| 11 | தஞ்சாவூர் வடக்கு | 19/10/2023 | மதியம் 12.00 மணி | |
| 12 | தஞ்சாவூர் தெற்கு | 19/10/2023 | மதியம் 2.00 மணி | |
| 13 | புதுக்கோட்டை வடக்கு | 20/10/2023 | காலை 9.00 மணி | சாரதா கிராண்ட், எமரால்டு ஹால், முதல் தளம், கீழராஜ வீதி, ஸ்டேட் பாங்க் அருகில் புதுக்கோட்டை. |
| 14 | புதுக்கோட்டை தெற்கு | 20/10/2023 | மதியம் 2.00 மணி | |

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால், அதுதொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**"அன்பகம்"**
சென்னை – 18.
நாள் : 11–10–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

## தமிழ்நாடு முதல்வரின் 'வணிகவரி சமாதான திட்டம்!'

# வணிகர் சங்கங்கள் வரவேற்பு!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக். 13 -

தமிழக சட்டப் பேரவையில் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அறிவித்த "வணிக வரி சமாதான திட்டம்" குறித்து தலையங்கத்தில் 'தினகரன்' நாளேடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு வணிகர் சங்கங்களின் சார்பில் பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

நாடு அல்லது மாநிலம் தன்னிறைவுடன் சிறந்து விளங்க பொருளாதாரம் மிகவும் வலுவாக இருக்க வேண்டும். மக்களின் ஆதரவோடு மக்கள் நலன் காக்கும் முறையானது மன்னர்கள் காலத்தில் இருந்தே நடைமுறையில் இருந்து வருகிறது. பண்டை காலத்தில், 'ஆறாவது பங்கு அரசனுக்கு' என்று கூறு வார்கள். நாட்டை காக்கும் தலைவனுக்கு தன் வருமானத்தில் ஒரு பங்கை மக்கள் கட்டாயம் அளிக்க வேண்டும். இதன்மூலம் நாட்டின் பாதுகாப்பு உட்பட பல விஷயங்களுக்காக தேவைப்படும் பொருளாதாரத்தை, ஈடுகட்டுவதற்கான ஒரு வரி வசூல் முறையாக இது கருதப்பட்டது. சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வணிக முறையில் மக்கள் சிறந்து விளங்கினர் என்பதை, கீழடி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அகழாய்வுகளில் கிடைத்த பொருட்கள் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். உள்நாட்டு வணிகம், வெளிநாட்டு வணிக முறைகள் பல ஆயிரம் ஆண்டுகள் தொட்டே இருந்து வந்திருக்கிறது.

ஆகவே, அரசர் காலம் முதல் ஆன்ட்ராய்ட் காலம் வரை ஒரு நாடு அல்லது மாநிலம் பொருளாதார தன்னிறைவு பெற, சிக்கலின்றி ஆட்சி நடைபெற வரி விதிப்பு மிகவும் அவசியம். சாதாரணமாக, நாம் ஒரு பொருளை வாங்கும் போது அதற்கான வரியும் சேர்த்தே வசூலிக்கப்படுகிறது. ஜி.எஸ்.டி. அமலான பின் சில பொருட்களுக்கு அதிகபட்சம் 28 சதவீதம் வரை வரி விதிக்கப்படுகிறது. அதே நேரம் அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளும் தங்குதடையின்றி வந்து சேர வேண்டும். அப்போதுதான் அரசு இயந்திரத்தை சிறப்பான முறையில் செயல்படுத்த முடியும். அந்த வகையில்தமிழக முதல்வரின் வணிக வரி சமாதான திட்ட அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின், வணிக வரி சமாதான திட்டத்தை அறிமுகப்படுத்தி பேசியபோது, "தமிழக அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை தொடர்பாக சுமார் 2.11



தினகரன்
அக்டோபர் 12, 2023 வியாழக்கிழமை
வணிகர்களுக்கு சலுகை

லட்சம் கேட்பு வழக்குகள் நிலுவையில் உள்ளன. வணிகர்கள் செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ.25 ஆயிரம் கோடி. நிலுவைத்தொகைகளை வசூலிப்பது தொடர்பாக வணிக வரி சமாதான திட்டத்தை அரசு வடிவமைத்துள்ளது. இதன்படி. ஒவ்வொரு வரி மதிப்பீட்டு ஆண்டிலும் ரூ.50 ஆயிரத்திற்கும் உட்பட்ட நிலுவை இனங்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும்" என அறிவித்தார்.

சிறு வணிகர்கள் நலன் கருதி வரி நிலுவையை தள்ளுபடி செய்வது தமிழக வரலாற்றில் இதுவே முதன்முறையாகும். இதன்மூலம் சுமார் 95 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு வணிகர்கள் பலன் அடைவார்கள் என்பது குறிப்பிடத் த்தக்கது. மேலும், ரூ.50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வரி நிலுவை வைத்திருப்பவர்கள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக் கும் குறிப்பிட்ட அளவு சதவீத நிலுவை த்தொகையை செலுத்தி வழக்குகளில் இருந்து தங்களை விடு வித்துக் கொள்ளலாம். வட்டி சலுகையும் அறிவிக்கப்பட்டுள்ளது. முதல்வரின் இந்த அறிவிப்பை வணிகர் சங்கங்கள் வெகுவாக வரவேற்றுள்ளன. இந்த சமாதான திட்டமானது வரும் அக். 16ம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது. அடுத்தாண்டு பிப். 15ம் தேதி வரை இந்த திட்டம் நடைமுறையில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. வணிகர்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே அரசின் எதிர்பார்ப்பு.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் முதல்வரை பாராட்டியுள்ளது.



தேனி தெற்கு கம்பம் நகராட்சி சார்பில் ரூபாய் 113.6 லட்சம் மதிப்பீட்டில் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் புதிய கழிப்பறைகள் கட்டுவதற்காக அடிக்கல்நாட்டு விழா கம்பம் 1வது வார்டு கோம்பை ரோடு, வார்டு 21 பழைய பேருந்து நிலையம் பகுதி, 26வது வார்டுக்கு உட்பட்ட எல்.எஃப்.ரோடு மற்றும் முப்பதாவது வார்டு ரேஞ்சர் ஆபிஸ் ரோடு ஆகிய பகுதிகளில் ரூபாய் 28.40 லட்சம் மதிப்பீட்டில் நான்கு கழிப்பறைகள் கட்டுவதற்கு, ரூபாய் 113.6 லட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு நகர்மன்ற தலைவர் வனிதா நெப்போலியன் தலைமையில் நடைபெற்றது. நகர் மன்ற துணைத் தலைவர் சுனோதா செல்வகுமார் மற்றும் நகராட்சி பொறியாளர் அய்யனார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர் மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்காக வழங்கப்பட்ட விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்!

**சென்னை, அக். 13-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (12.10.2023) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சந்தித்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்காக மே 2021 முதல் இதுநாள்வரை வழங்கப்பட்ட விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (12.10.2023) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் சந்தித்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்காக மே 2021 முதல் இதுநாள்வரை வழங்கப்பட்ட விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை ஆணையர் ஆர். லால்வேனா, தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் திட்ட இயக்குநர் எம். கோவிந்த ராவ், மருத்துவக் கல்வி இயக்குநர் மரு.ஆர். சாந்திமலர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.ஏ. சண்முககனி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.டி.எஸ். செல்வவிநாயகம், குடும்ப நலத்துறை இயக்குநர் மரு. ஹரி சுந்தரி, மாநில காசநோய் அலுவலர் / கூடுதல் இயக்குநர் மருத்துவம் (காசநோய்) மரு. ஆஷா பிரடெரிக் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மே 2021 முதல் இதுநாள்வரை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையால் பெறப்பட்ட விருதுகளின் விவரங்கள்

13.12.2021 அன்று உலகளாவிய சுகாதார பாதுகாப்பு தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற தேசிய அளவிலான நிகழ்ச்சியில், நாட்டிலேயே அதிகபட்சமாக 22 தொற்றா நோய்களுக்கான 29,88,110 பரிசோதனைகள் மேற்கொண்டதற்காகவும், பிரச்சாரத்தின் போது அதிக எண்ணிக்கையிலான 85,514 ஆரோக்கிய அமர்வுகளை நடத்தியதில் மூன்றாவது இடத்தை பெற்றதற்காகவும் தமிழ்நாடு இரண்டு விருதுகளை வென்றுள்ளது.

24.3.2022 அன்று புதுதில்லியில் நடைபெற்ற உலக காசநோய் தினத்தில், காசநோயின் பாதிப்பை 40 விழுக்காடு குறைத்ததற்காக நீலகிரி மாவட்டத்திற்கு வெள்ளிப் பதக்கமும், காசநோயின் பாதிப்பை 20 விழுக்காடு குறைத்ததற்காக விழுப்புரம், சிவகங்கை, கன்னியாகுமரி, நாமக்கல், நாகப்பட்டினம் மற்றும் கரூர் ஆகிய 6 மாவட்டங்களுக்கு வெண்கல பதக்கமும் ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் வழங்கப்பட்டது.

7.6.2022 அன்று புதுதில்லியில் நடைபெற்ற உலக உணவு பாதுகாப்பு தினத்தையொட்டி நிகழ்ச்சியில், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம், மனித வளம் மற்றும் நிறுவனங்களைப் பற்றிய தரவுகள், தர நிர்ணய விதிமுறைகளைப் பின்பற்றுதல், உணவு பொருட்களைப் பரிசோதிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு, நுகர்வோருக்கு அதிகாரமளித்தல் ஆகிய ஐந்து குறியீடுகளின் அடிப்படையில் தர மதிப்பீடு செய்ததில், 2021-22 ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டில் இந்திய அளவில் தமிழ்நாடு முதல் மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு அதற்கான விருதினை பெற்றுள்ளது.

7.6.2022 அன்று புதுதில்லியில் நடைபெற்ற உலக உணவு பாதுகாப்பு தினத்தையொட்டி நிகழ்ச்சியில், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் நடத்தப்பட்ட உணவு வணிகங்களுக்கான உரிமம் / பதிவுச் சான்று வழங்குதல் மற்றும் உணவு மாதிரிகள் எடுத்து கண்காணித்தல், பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவு வழங்குவது குறித்து தர மதிப்பீடு செய்தல் மற்றும் சான்று வழங்குதல், தரமான, பாதுகாப்பான, செறிவூட்டப்பட்ட, ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவு பழக்கத்தை ஏற்படுத்துதல், உணவு உட்கொள்ளும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் தொடர்பாக உண்ணத் தகுந்த உணவு குறித்த போட்டியில் (Eat Right Challenge) இந்தியா முழுவதும் 150 மாவட்டங்கள் பங்கேற்றதில், 75 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம், சேலம், கோயம்புத்தூர், சென்னை, திருநெல்வேலி, ஈரோடு, மதுரை, தூத்துக்குடி, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய 11 மாவட்டங்கள் சிறந்த செயல்பாட்டிற்கான விருதினை பெற்றுள்ளது.

27.7.2022 அன்று ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம் புதுடெல்லியில் நடத்திய தேசிய குடும்ப கட்டுப்பாடு உச்சிமாநாட்டில், தமிழ்நாட்டில் பெண்களுக்கான பேறுகாலத்திற்கு பின் பொருத்தப்படும் தற்காலிக நவீன கருத்தடை சாதனம் தொடர்பான சாதனையில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றதற்காக விருது வழங்கப்பட்டன.

28.7.2022 அன்று கர்ப்பிணி பெண்களுக்கான ஹெப்படைடிஸ்பி பரிசோதனைகளுக்கான ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளுக்காக 2021-22ஆம் ஆண்டிற்கான விருது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டது.

9.9.2022 அன்று அரசு சமுதாய சுகாதார மையங்கள் பிரிவின் தேசிய தர உறுதி நிர்ணய திட்டத்தை (NQAS) தமிழ்நாட்டில் 250 அரசு சமுதாய சுகாதார மையங்களில் செயல்படுத்தியதற்காக தேசிய அளவில் முதல் நிலை விருதினை ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம் தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது.

9.9.2022 அன்று அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் அரசு துணை மாவட்ட மருத்துவமனை பிரிவின் கீழ், தமிழ்நாட்டில் 100 அரசு மருத்துவமனைகளுக்கு மேல் தேசிய தர உறுதி நிர்ணய திட்டம் (NQAS) செயல்படுத்தியதற்காக தேசிய அளவிலான இரண்டாம் நிலை விருதினை ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம் தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது.

10.12.2022 அன்று உத்திரபிரதேசம் மாநிலம், வாரணாசியில் நடைபெற்ற “அனைவருக்கும் நலவாழ்வு திட்டம்“ தின நிகழ்ச்சியில், அனைவருக்கும் நலவாழ்வு மையங்கள் மூலம் 12.10.2022 முதல் 8.12.2022 வரை 22,58,739, தொலை தொடர்பு மருத்துவ ஆலோசனைகள் வழங்கி இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடமும், கிராமப்புறங்களில் நலவாழ்வு மையங்கள் மூலம் தொலைதூர மருத்துவ சேவையை (Tele Consultation) செயல்படுத்தியதில் பெரிய மாநிலங்களில் இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடமும் பெற்றதற்காக பாராட்டுச் சான்றிதழும், கேடயமும் தமிழ்நாடு பெற்றுள்ளது.

16.12.2022 அன்று பிரதான் மந்திரி சுரஷத் மாத்ரித்வா அபியான் திட்டம் சிறப்பாக செயல்படுத்தி மகப்பேறு சிக்கல்கள் உள்ள கர்ப்பிணி தாய்மார்களை கண்டறிந்து சிகிச்சை வழங்குவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றதற்காக ஒன்றிய அரசின் விருது வழங்கப்பட்டது.

16.12.2022 அன்று சுரஷத் மாத்ரித்வா ஆஷ்வாசன் திட்டம் (சுமன்) செயல்படுத்தப்பட்டதற்காக தமிழ்நாட்டிற்கு இரண்டாம் இடமும், தடுக்கக்கூடிய மகப்பேறு இறப்புகளை தவிர்த்தலில் பெரிய மாநிலங்களுக்கான குறியீட்டில் இரண்டாம் இடமும் தமிழ்நாடு பெற்றுள்ளது.

2022ஆம் ஆண்டிற்கான ஸ்கோச் விருதினை (SKOCH Award) 128 அரசு மருத்துவ நிலையங்களில் டயாலிசிஸ் சேவையை வழங்கி வருவதற்காக தமிழ்நாடு பெற்றுள்ளது.

16.1.2023 அன்று ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் மாதவிடாய் கால தன் சுத்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருவதற்காக, மிகச் சிறந்த மாதவிடாய் கால தன் சுத்த இயக்க விருதினை தமிழ்நாடு பெற்றுள்ளது.

16.01.2023 அன்று ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம், 16.1.2023 மற்றும் 17.1.2023 ஆகிய நாட்களில் நடத்திய பள்ளிகள் சுகாதாரம் மற்றும் நலவாழ்வு தூதுவர்கள் திட்டத்திற்கான கருத்தரங்கில் தேசிய இளம் சிறார் நலத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருவதற்காக தமிழ்நாட்டிற்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

24.03.2023 அன்று உத்தர பிரதேச மாநிலம், வாரணாசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காசநோய் இல்லாத நிலையை நோக்கி முன்னேறி வருவதற்காக 2022ஆம் ஆண்டிற்கான தங்கப் பதக்கங்கள் திருச்சிராப்பள்ளி மற்றும் திருவாரூர் மாவட்டங்களுக்கும், வெள்ளிப் பதக்கங்கள் மதுரை, தூத்துக்குடி, கரூர், கன்னியாகுமரி, திருவண்ணாமலை மாவட்டங்களுக்கும், வெண்கலப் பதக்கம் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும் ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் வழங்கப்பட்டன. மேலும், நிலையான வளர்ச்சி இலக்கு கட்டமைப்பின்படி 2015 முதல் காசநோய் பாதிப்பு 80% குறைப்பு முயற்சியின் கீழ், 2022ஆம் ஆண்டிற்கான காசநோய் இல்லாத மாவட்டமாக நீலகிரி மாவட்டம் அறிவிக்கப்பட்டு, தேசிய அளவில் விருது வழங்கப்பட்டது.

7.6.2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற உலக உணவு பாதுகாப்பு தினத்தையொட்டி நிகழ்ச்சியில், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம், மனித வளம் மற்றும் நிறுவனங்களைப் பற்றிய தரவுகள், தர நிர்ணய விதிமுறைகளைப் பின்பற்றுதல், உணவு பொருட்களைப் பரிசோதிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு, நுகர்வோருக்கு அதிகாரமளித்தல் ஆகிய ஐந்து குறியீடுகளின் அடிப்படையில் தர மதிப்பீடு செய்ததில், 2022-23ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டில் இந்திய அளவில் தமிழ்நாடு மூன்றாவது மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு அதற்கான விருதினை பெற்றுள்ளது.

7.6.2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற உலக உணவு பாதுகாப்பு தினத்தையொட்டி நிகழ்ச்சியில், உணவு வணிகங்களுக்கான உரிமம் / பதிவுச் சான்று வழங்குதல் மற்றும் உணவு மாதிரிகள் எடுத்து கண்காணித்தல், பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவு வழங்குவது குறித்து தர மதிப்பீடு செய்தல் மற்றும் சான்று வழங்குதல், தரமான, பாதுகாப்பான, செறிவூட்டப்பட்ட, ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவு பழக்கத்தை ஏற்படுத்துதல், உணவு உட்கொள்ளும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் தொடர்பாக இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் நடத்தப்பட்ட 2022-2023ஆம் ஆண்டிற்கான Eat Right Challenge போட்டியில் இந்திய அளவில் 260 மாவட்டங்கள் கலந்து கொண்டதில், வெற்றி பெற்றது என தேர்வு செய்யப்பட்ட 31 மாவட்டங்களில் தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, பெரம்பலூர், சென்னை, காஞ்சிபுரம், சேலம், திருவள்ளூர், திருப்பூர், சிவகங்கை, நாமக்கல், திருச்சிராப் பள்ளி, வேலூர் ஆகிய 13 மாவட்டங்கள் சிறந்த செயல்பாட்டிற்கான விருதுகளை பெற்றது. இப்போட்டியில், கோயம்புத்தூர் மாவட்டம் இந்திய அளவில் முதலிடம் பிடித்தது.

3.08.2023 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற 13வது தேசிய உறுப்பு கொடை தினத்தில், தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று சிசிக்சை நிறுவனத்தால், உறுப்பு மாற்று சிகிச்சையில் சிறந்த செயல்பாட்டிற்கான இந்திய அளவில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விருதினை பெற்றது.

தேசிய சுகாதார ஆணையம் ஆயுஷ்மான் பாரத் - பிரதம மந்திரி மக்கள் ஆரோக்ய திட்டம் மற்றும் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் திட்டத்தின் பயணத்தில் இவ்வாண்டு செப்டம்பர் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. ஆயுஷ்மான் பாரத் - பிரதம மந்திரி மக்கள் ஆரோக்ய திட்டத்தில் சிறந்த சேவை புரிந்தமைக்காக 24 மாநிலங்களிலிருந்து 70 கருத்துருக்கள் பெறப்பட்டதில், 5 கருத்துருக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன் ஒருங்கிணைந்த பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கிய திட்டத்தில் 2022ஆம் ஆண்டில் தனியார் மருத்துவ மனைகளுக்கு இணையாக அரசு மருத்துவமனைகள் மொத்த காப்பீட்டு சிகிச்சை தொகையில் 50 விழுக்காடு ஈட்டியுள்ளன. இந்த தொகையை முழுமையாக அரசு மருத்துவமனைகளை வலுப்படுத்துவதற்காகவும், உயர் சிறப்பு அறுவை சிகிச்சைகளை தொகுப்பு நிதியின் மூலம் செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டுவருகிறது. இவ்வாறு அரசு நிதியை திறம்பட பயன்படுத்தியதற்காக தமிழ்நாட்டிற்கு விருது வழங்கி பெருமைபடுத்தியுள்ளது.

10.10.2023 அன்று புதுதில்லியில் ஒன்றிய அரசின் மருத்துவம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சார்பில் உலக மனநல நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், நட்புடன் உங்களோடு மனநல சேவை - தொலைபேசி வழி மனநல சேவை வழங்குவதில் தமிழ்நாடு முதலிடம் பெற்றமைக்காக விருது வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை ஆணையர் ஆர். லால்வேனா, தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் திட்ட இயக்குநர் எம். கோவிந்த ராவ், மருத்துவக் கல்வி இயக்குநர் மரு.ஆர். சாந்திமலர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.ஏ. சண்முககனி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.டி.எஸ். செல்வவிநாயகம், குடும்ப நலத் துறை இயக்குநர் மரு. ஹரி சுந்தரி, மாநில காசநோய் அலுவலர் / கூடுதல் இயக்குநர் மருத்துவம் (காசநோய்) மரு. ஆஷா பிரடெரிக் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பா. மனோகரன்

**அக்டோபர் 13 (2020)**



**1986ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பொறுப்புகளை வகித்தவர்.**

**1989ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அத்தொகுதிக்கு பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கழக தலைவர் தளபதி தலைமை! அன்னை சோனியா காந்தி பேருரை!

# தி.மு.க. மகளிர் உரிமை மாநாடு - வேலூர் மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

*வேலூர், அக். 13-*

*வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டப்பேரவை தொகுதி உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கழக மகளிரணி நிர்வாகிகளுக்கு விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:-*

*இந்தியாவில் பல மாநிலங்களில் பழமைவாதிகள் மற்றும் மதவாதிகள் மூலமாக இந்திய பெண்கள் பல்வேறு பழமைவாத சட்டங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டு அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு மாக்களை விட கேவலமாக நடத்தப்பட்டு வந்துள்ளனர். இதன் காரணமாக கல்வி மறுக்கப்பட்டது. குழந்தை திருமணம் அரங்கேற்றப்பட்டது. பெண்கள் போகப்பொருளாக கையாளப்பட்டுவந்தனர். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என அடுப்பங்கரையிலே அவர்களது கல்வி உரிமை தீயிட்டு கொளுத்தப்பட்டது.*

*இந்த வேளையில் தமிழ்நாட்டில் முற்போக்கு சிந்தனை கொண்ட இராமாமிர்தம்மாள், டாக்டர்.முத்துலட்சுமி ஆகியோர் பெண்களுக்கான உரிமைகளை மீட்டெடுத்த நீதிக்கட்சி தென்இந்திய நல உரிமை சங்கம், திராவிடர் கழகம் தி.மு.க. போன்ற சமூக சீர்திருத்த முற்போக்கு சிந்தனை கொண்ட இயக்கங்களில் இணைத்துகொண்டு பெண் விடுதலை, கல்வி, பெண் உரிமை போன்ற சமூக சீர்திருத்தங்களை தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகிய திராவிட தலைவர்களின் முன்னெடுப்பால் பெண்களுக்கு வாக்குரிமை, கல்விமறுப்பு, இளமை திருமணம் உடன்கட்டை ஏறுதல், தேவதாசி முறை ஆகிய சமூக மூடபழக்கங்களை*



*களைந்து சமுதாயத்தில் மகளிருக்கான மாற்றங்களை சட்டங்களாக கொண்டு வந்து நிறைவேற்றி சமூக புரட்சியை திராவிட சிந்தனையால் மீட்டு எடுத்தனர்.*

*அந்த வகையில் இன்று மகளிர் அனைத்துத் துறைகளிலும் சுயசார்போடு தன் னெழுச்சியாக ஆண்களுக்கு நிகராக வெற்றிபெற்றுள்ளார்கள். இதனை மேலும் முன்னெடுத்து மெருகேற்றும் வகையில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர் திருமதி. சோனியாகாந்தி விழாப்பேருரையோடு தலைநகர் சென்னையில் நாளை (14.10.2023 - சனிக்கிழமை) மாலை 4.30 மணிக்கு நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் அகில இந்திய பெண் தலைவர்கள் பங்கேற்பில், கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலையில் நடைபெற உள்ள மகளிர் உரிமை மாநாட்டில் வேலூர் மாவட்ட தி.மு.க. விற்கு உட்பட்ட மாநில கழக மகளிர் பிரச்சாரஅணி செயலாளர் மற்றும் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த வேலூர் மாநகர மகளிர் அணி அமைப்பாளரும் மற்றும் மாநகர மேயரும், ஒன்றியக்குழு பெண் பெருந்தலைவர்கள், நகர மன்ற பெண் தலைவர்கள், பேரூராட்சி மன்ற பெண் தலைவர்கள், துணை தலைவர்கள், மாமன்ற,ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர், ஊராட்சி போன்ற அமைப்புகளின் பெண் உறுப்பினர்கள், பெண் ஆர்வலர்கள்,*

*அனைத்து சார்பு அணிகளின் பெண் நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்துகொள்ள ஏதுவாக மாவட்ட மகளிரணி அமைப்பாளர் மற்றும் மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஆகியோர்கள் மாநகர, ஒன்றிய, நகர பகுதி மற்றும் பேரூர் செயலாளர்களின் வழிகாட்டுதலோடு முன்னேற்பாடு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

*இவ்வாறு வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டப் பேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.*

முதல்வர் உத்தரவுப்படி

# 1281 தரைப்பாலங்கள் உயர் மட்டப் பாலங்களாக மாற்றப்படுகின்றன!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

**சென்னை, அக். 13 – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி 1281 தரைப் பாலங்கள் உயர் மட்ட மேம்பாலங்களாக மாற்றப் படுகின்றன என்று சட்டப் பேரவையில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு உறுப்பினர் ஜி.கே.மணி எழுப்பிய கேள்விக்குப் பெருமிதத் துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்த விவாதம் வருமாறு:-

**ஜி.கே.மணி:** காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவது குறித்து, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் ஒரு கோரிக்கை வைத்தேன். அதை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 250 கோடி மதிப் பீட்டில் பாலம் கட்டப்படும் என்ற ஒரு மகத்தான அறிவிப்பை வெளியிட்டார்கள். அதற்காக பொது மக்களின் சார்பில் நான் அப்பொழுதே நன்றியைத் தெரிவித்துக்கொண்டேன். இந்தப் பாலம் என்பது தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களை இணைப்பது என்பது உண்மை. அதே நேரத்தில் கொச்சின் துறை முகத்திலிருந்து பாலக்காடு, கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு மாவட்டம், கொளத்தூர் வழியாக ஆற்றைக் கடந்து பெண்ணாகரம், பாலக்கோடு, ஓசூர், பெங்களூர், மும்பை வரையிலே இணைக்கக்கூடிய தேசிய நெடுஞ்சாலைகளோடு இணைத்துவிட்டால், அது போக்குவரத்திற்கு மிக எளிதாக இருப்பதோடு, போக்குவரத்து நேரமும் குறையும், எரிபொருளும் சிக்கனமாகும் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு ஏது வாகவும் இருக்கும் என்பதன் அடிப்படையிலேதான் இது ஒரு நல்லத் திட்டம்.

இதை அரசு நிறைவேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை கேள்வியோடு வைக்கிற அதேநேரத்தில், முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்தத் திட்டத்தை நல்ல மனம் படைத்த, எதையும் எப்படியும் செய்யும் ஆற்றல்மிக்க அமைச்சர் அவர்கள் இதை விரைந்து செய்து முடிப்பார்களா?

**அமைச்சர் எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தளபதியார் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கூறினார்கள். தரைப் பாலங்களைப் பொறுத்தவரையில், வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற காலங்களில், அதன் வழியாக மக்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்லவே முடியாத நிலை ஒருகாலத்தில் இருந்தது. முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 1,281 தரைப் பாலங்களை உயர் மட்டப் பாலங்களாக தர முயர்த்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள். அந்த அடிப்படையில், 2021- 2022 ஆம் ஆண்டில் 693 பாலங்கள், 2022-2023 ஆம் ஆண்டில் 66 பாலங்கள், 2023-2024 ஆம் ஆண்டில் 277 பாலங்கள் என இந்த 3 நிதியாண்டுகளில் ஏறத்தாழ 1,036 பாலங்களைக் கட்ட இந்த அரசின் சார்பாக முடிவு செய்யப் பட்டது.

நிதி நிலைமை எப்படியிருக்கிறது என்பது பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். இருந்தாலும், பாலம் கட்ட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஏற்று, துறையின் சார்பாக அதற்கான திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயாரிக்கப் பட்டு, டெண்டர் விடப் பட்டு, 667 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியிருக்கிற 409 பாலங்களைக் கட்டும் பணிகள் தற்போது நடை பெற்று வருகின்றன. இந்நிலையில், அடுத்த ஆண்டு 248 பாலங்கள் கட்டுவதற்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.



இந்த அடிப்படையில் தான், முதலமைச்சர் அவர்கள் தர்மபுரிக்கு சென்றபோது, சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பாலம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்தப் பாலம் சேலம் மாவட்டத்தையும் தர்ம புரி மாவட்டத்தை யும் இணைக்கிற ஒரு பாலம் ஆகும்; அது தேவையான தும்கூட. சேலம் மாவட்டம் கோட்டையூரையும், தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஒட்டனூரையும் இணைக்கின்ற பாலம் ஆகும். ஒட்டனூர் என்ற ஊர் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்த ஊர். அதற்குப் பக்கத்தில்தான் அவருடைய சொந்த ஊர் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள், அந்த இரண்டு ஊரையும் இணைக்கின்ற வகையில் பாலம் அமைக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அந்தப் பாலம் கட்டப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவுடனேயே, துறையின் சார்பாக அதற்கான ஏற்பாடுகளை செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்காக டெண்டர் விடப்பட்டு, 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

அந்தப் பாலம் முழுக்க முழுக்க ஆற்றைக் கடந்து செல்கின்ற பாலம் ஆகும். எனவே, நீர்வளத் துறையிடமிருந்தும், வனத் துறையிடமிருந்தும் NOC தடையில்லா சான்று பெற வேண்டும். மேற்படி துறைகளிடமிருந்து NOC பெற வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, அத்துறைகளுக்கு உரிய கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவையும் வரவிருக்கின்றன. திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டவுடனேயே, முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பாலம் என்கிற அடிப்படையில், அதற்கு முன்னுரிமை அளித்து, அவரிடத்தில் அனுமதி பெற்று, வரவிருக்கும் நிதியாண்டில் அப்பாலத்தை கட்டுவதற்கு துறையின் சார்பாக முயற்சி எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.

கல்லூரிகளின் கட்டமைப்பை மேம்படுத்த

# ரூ.1000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார் முதல்வர்!

## பேரவையில் அமைச்சர் – முனைவர் க.பொன்முடி தகவல்!

சென்னை, அக். 13 - சட்டப்பேரவையில் உறுப்பினர் எம்.ஆர்.காந்தி எழுப்பிய கேள்விக்கு, உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி பதிலளிக்கையில், கல்லூரிகளின் கட்டமைப்பை மேம்படுத்த முதல்வர் அவர்கள் ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்துள்ளார் என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, உறுப்பினர் எம்.ஆர். காந்தி, நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர் தங்கும் விடுதி கட்டப்படுமா? என்ற கேள்விக்கு அமைச்சர் முனைவர் க.பொன்முடி அளித்த பதில் வருமாறு :-



உறுப்பினர் கோரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்கள் விடுதி வசதியானது, மாணவர்களின் தேவைக்கேற்ப அக்கல்லூரிக்கு அருகில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதி திராவிடர் நலத் துறை சார்ந்த விடுதிகள் உள்ளன. ஆகவே, அந்த விடுதிகளிலே மாணவர்கள் தங்கிப் படிக்கலாம். அதுமட்டுமின்றி, அங்கே பள்ளி மாணவர்களுக்கான பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப் பட்டோர் விடுதியும் உள்ளது. அந்த விடுதியிலும், அரசுக் கல்லூரி மாணவர்களைச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களும் மேற்கொண்டு வருகிறார்கள். ஆகவே, அந்த விடுதியை, இந்த அரசுக் கலைக் கல்லூரியின் விடுதியாகச் சேர்ப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர் அவர்கள் விடுதியைப் பற்றிக் கேட்டார். அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அவர் குறிப்பிட்டதைப்போல, 1,794 மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். அதில் 1549 மாணவர்கள் உள்ளூர் மற்றும் வெளியூர்களிலிருந்து.

ஆகவே, அங்கே விடுதியிலே தங்கியிருப்பவர்கள் 245 பேர் மட்டும்தான். அதுகூட, நான் ஏற்கெனவே சொன்னதைப்போன்று, BC students hostels, SC students hostels எல்லாம் இருக்கின்றன. அங்கேயும் மாணவர்கள் இன்னும் சேருவதற்கு தேவை இருக்குமானால் பள்ளி மாணவர்கள் சேருகிற அந்த விடுதியும் BC, MBC & Minorities Welfare Department ன் மூலமாக இயங்குகின்ற விடுதியும் மாற்றப்படும். நீங்கள் மேலும் அங்கே கட்டட வசதிகள், கல்லூரி வசதிகள், படிப்பை உயர்த்துவது பற்றியெல்லாம் கேள்வி கேட்டிருக்கிறீர்கள்.

இவ்வரசு பொறுப்பேற்றவுடன் தமிழக முதலமைச்சர் அவர்கள் கல்லூரிகளினுடைய உட்கட்டமைப்புகளை மேம்படுத்த, அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் ரூ.1,000/ கோடி செலவில் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் ஒரு சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டு, அறிவித்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, உயர் கல்வியினுடைய வளர்ச்சிக்காக முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற பல்வேறு நடவடிக்கைகளிலே பெருந்தலைவர் காமராஜர் பெயரிலே அமைந்திருக்கிற திட்டமும் ஒன்றாகும்.

தற்போது 26 பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் 55 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குத் தேவையான ஆய்வகங்கள், வகுப்பறைகள், விடுதிகள், கழிப்பறைகள் மற்றும் இதர வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புகளை மேற்கொள்ள 2022- 2023 ஆம் நிதியாண்டில் ரூ.262 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிற தொகை ரூபாய் ஆயிரம் கோடி; அதிலே ரூ.262 கோடி இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாக அந்தந்த கல்லூரிகளினுடைய தேவைகளுக்கேற்ப, அங்கே பயில்கின்ற எல்லா மாணவர்களுடைய கோரிக்கைகளுக்கேற்ப, இன்னும் கேட்டீர்களென்றால், அங்கே உள்ள கல்லூரிகளில் இடவசதிகூட இல்லாமல் இருக்கிறது. அதையும் நாங்கள் கோரியிருக்கிறோம். ஆகவே, அவையெல்லாம், வருங்காலங்களிலே முறையாக, படிப்படியாக, நிதி நிலைமைக்கேற்ப சரி செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் முனைவர் க.பொன்முடி பதிலளித்தார்.

திருவாரூர் கமலாலய குளத்தில்

# படகு சவாரி - மிதவைப் பூங்கா அமைத்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் பூண்டி கே.கலைவாணன் வலியுறுத்தல்!

சென்னை, அக்.13- சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன், திருவாரூர் கமலாலயக் குளத்தில் படகு சவாரி - மிதவை பூங்கா அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு :



**பூண்டி கே.கலைவாணன்:** மண்ணின் மைந்தர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது இளம் பிராயத்திலே துணிச்சலோடு நீந்திக் கடந்த கமலாலயத்தைஇன்றைய முதல்வர் அவர்கள் கமலாலயத்தைக் கடந்து செல்லும்போதெல்லாம், ஆள் அரவமற்ற அந்த நிலையைப் பார்த்து செல்லும் அந்த நிலையில், அந்தக் கமலாலயக் குளத்தில் திருவாரூருக்கு ஒரு அடையாளமாக உள்ள தேர் சுற்றிவரும் அந்த நிலையில், அந்த தெப்பக் குளத்தில் படகு சவாரி ஏற்கெனவே முன்பெல்லாம் சுற்றுலாத் துறையின் சார்பாக படகு போக்குவரத்து இருந்தது. இப்போது இல்லை. அதை இந்து சமய மற்றும் அறநிலையத் துறை சார்பாக அந்தக் கமலாலயத்தில் படகு சவாரி ஏற்பாடு செய்வதோடு, மிதவைப் பூங்காவையும் அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பி.கே.சேகர்பாபு: 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தின் போது, சுற்றுச்சுவர் படிக்கட்டுகள் இடிந்து விழுந்ததால் சாலைகள் சேதம் அடைந்திருந்த நிலையில், ஆழித் தேரோட்டத்திற்கு 20 நாட்கள்தான் இருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதன் நிலையை அறிந்து உடனடியாக, நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்து இந்தாண்டு ஆழித் தேர் ஓட வேண்டுமென்று உத்தரவிட்டார். 15 தினங்களிலேயே அந்த தெருவை மேம்படுத்தி, ஓடுமா? ஓடாதா? என்ற கேள்வியோடு இருந்து ஆழித் தேரை ஓட்டியப் பெருமை முதல்வர் அவர்களையேச் சாரும் என்பதை இந்தநேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுற்றுலா படகு சவாரி குறித்த கோரிக்கை தொடர்பாக சுற்றுலாத் துறையோடு கலந்துபேசி, வாய்ப்பிருந்தால் சுற்றுலாத் துறையோ அல்லது இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலோ உறுப்பினருடைய விருப்பம் நிறைவேற்றித் தரப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.


நினைவில் வாழும் திராவிடச் சுடர்
முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்

பரிதிஇளம்வழுதி

முன்னாள் – கழக துணை பொதுச்செயலாளர்

ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

நாள் : 13.10.2023 வெள்ளிக்கிழமை



அன்புத் தந்தையே!

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் இந்திரஜித் வீர அபிமன்யுவாய்,
கழகத் தலைவர் தளபதியாரின் உடன்பிறப்பாய்,
தாங்கள் கழகத்திற்காக பணியாற்றியதை நெஞ்சில் நிறுத்தி
கழகத் தலைவர் தலைமையில்
தொண்டு செய்வோம் என்றும் கழக தொண்டனாய்...

என்றும் உங்கள் நினைவுகளுடன்

மனைவி உதயகுமாரிஇளம்வழுதி B.SC.,

மகன் பரிதிஇளம்சுருதி BCA.,M.A.,LLB.,MC ● மருமகள் Y.R.நந்தினி BHMS.,

கழக அயலக அணி மாநில துணை செயலாளர்
99வது வார்டு மாமன்ற உறுப்பினர் – எழும்பூர் தொகுதி

மருமகன் வி.நிரேஷ் B.E.,M.Tech., ● மகள் இ.அனுயாழினி M.A.,(HR)

பேரன் N.நேதாஜி யாஷ்

Star Digital 044 - 43 55 48 47

குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்


ஊடகவியலாளர்

# மு.குணசேகரன் தந்தை முனியா மறைவு!



தருமபுரி, அக். 13- தருமபுரி மாவட்டத் தில் பண்ட ஹள்ளி கிராமத்தின் எளிய விவசாயியான பெரியவர் முனியா அவர்கள் சிறந்த கொள்கை பற்றாளர்; முதிர்ச்சியானவர்.

'சன்' தொலைக்காட்சி செய்தி ஆசிரியர் மு.குணசேகரனின் தந்தையார். அவர் தனது 97ஆவது வயதில் சென்னை ஷெனாய் நகரில் உள்ள குணசேகரன் அவர்களது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

ஊடகவியலாளர் மு.குணசேகரன், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன் அவர்களது மகளான திருமதி அன்புமதியின் வாழ்விணையர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.பி. பவளவண்ணன்

### அக்டோபர் 13 (1975)



சென்னை, சைதை பகுதியில் இளம் வயதிலேயே தொண்டராக பணியாற்றி கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்.

தலைவர் கலைஞர்மீது மாறா அன்பும் பாசமும் கொண்டவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். பேச்சாளராகவும் விளங்கியவர்.

1964ல் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினராகவும் – 1967ல் சென்னை மாநகர துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.10.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாட்டினை பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு அரசின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு முன்னோடித் திட்டமான நீலகிரி வரையாடு திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் எம்.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் வீ.நாகநாதன், ஆனைமலை புலிகள் காப்பகத்தின் கள இயக்குநர் மற்றும் வனப் பாதுகாவலர் எஸ்.ராமசுப்ரமணியன், கோயம்புத்தூர் மாவட்ட வன அலுவலர் என்.ஜெயராஜ், நீலகிரி வரையாடு பற்றிய குறும்படத்தை தயாரித்த பிரவீன் சண்முகானந்தம் மற்றும் தனுபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.10.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாட்டினை பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு அரசின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு முன்னோடித் திட்டமான நீலகிரி வரையாடு திட்டத்தை தொடங்கி வைத்து, பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வரையாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புத்தகங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் எம்.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் வீ.நாகநாதன், ஆனைமலை புலிகள் காப்பகத்தின் கள இயக்குநர் மற்றும் வனப் பாதுகாவலர் எஸ்.ராமசுப்ரமணியன், கோயம்புத்தூர் மாவட்ட வன அலுவலர் என்.ஜெயராஜ், நீலகிரி வரையாடு பற்றிய குறும்படத்தை தயாரித்த பிரவீன் சண்முகானந்தம் மற்றும் தனுபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் திட்டமிட்டு கலகம் செய்திருக்கிறார்கள்!

# உட்கட்சிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்!

## அவைக்கு குந்தகம் ஏற்படுத்திய எதிர்க்கட்சி உறுப்பினர்களை வெளியேற்றிய பின் - பேரவைத் தலைவர் மு.அப்பாவு விளக்கவுரை!



சென்னை, அக் 13-

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனி சாமி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கை சம்பந்தமான பிரச்சினையை எழுப்பி பேசிய போது அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஒட்டு மொத்தமாக எழுந்து கூச்சலிட்டும், பேரவைத் தலைவர் இருக்கையை சூழ்ந்து கொண்டும் தரையில் அமர்ந்தும் அவை நடவடிக்கைக்கு குந்தகம் ஏற்படுத்தும் விதமாக நடந்து கொண்டதையடுத்து எதிர்க்கட்சி அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் அவைக் காவலர்களைக் கொண்டு வெளியேற்றினார் பேரவைத் தலைவர்.

இதனையடுத்து பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் விளக்க மளித்து பேசியதாவது: -

3 நாட்கள் நடைபெறும் சட்டமன்றக் கூட்டத் தொடரிலும், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருமே கலகம் செய்ய வேண்டும், விவகாரம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு வந்திருக்கின்றார்கள். அதோடு மட்டுமல்ல, அவர்களுடைய கட்சிப் பிரச்சினை களை இந்தச் சட்டமன்றத்தில் தீர்த்து வைக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றார்கள். ஒருபோதும் இந்தச் சட்டமன்றம், அவர்களுடைய உள்கட்சி விவகாரங்களில், தலையிட்டதும் இல்லை. இனியும் தலையிடப்போவதும் இல்லை.

ப.தனபால் தெளிவாக குறிப்புரை கொடுத்து இருக்கிறார்!

இந்தப் பேரவையில் அப்படிப்பட்ட நிலை ஒரு போதும் வரவேண்டிய அவசியமும் இல்லை. அவர்கள் பல முறை சொல்லிக் கொண்டே இருக்கின்றார்கள். இருக்கைகள் ஒதுக்குவதைப் பற்றி நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, உறுப்பினர் ப. தனபால் அவர்கள் ஏற்கெனவே தெளிவாக குறிப்புரை கொடுத்திருக்கின்றார்கள். அதைப் பற்றி அவையில் பேச வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை. யார், யார் எங்கு உட்கார வேண்டும் என்பது குறித்து முன்னாள் முதலமைச்சர் உட்பட இங்கு இருக்கின்ற அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் ஏற்கெனவே இடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதைத், திரும்ப மாற்ற வேண்டும் என்ற அவசியம் எனக்கு ஏற்பட்டால் நான் மாற்றுவேன்.

என்னுடைய அறையில் வந்து இருக்கைகள் குறித்து பேசினார்கள். தகுந்த பதில் சொல்லியிருக்கின்றேன். விதியும் அதற்கு இடம் கொடுக்கவில்லை. இந்த அவை இதுவரை விதிப்படி நடைபெறு கின்றது. சட்டப்படி நடைபெறுகின்றது. ஏற்கெனவே நாம் பதிவு செய்ததைத்தான் மீண்டும் சொல்கின்றேன். நம்முடைய உறுப்பினர் ஓ. பன்னீர்செல்வம் உட்பட 11 பேர் இந்த அவையில் இரட்டை இலைச் சின்னத்தில் வெற்றி பெற்று வந்து, இரட்டை இலைக்கு எதிராக Floor testல் ஓட்டுப் போட்டதற்குப் பிறகு, Tenth Schedule of the Indian Constitutionபடி அவர்களை பதவி நீக்கம் செய்திருக்க வேண்டும். அவர்கள் தேவையென்றால் வைத்துக்கொள்கின்றார்கள். தேவையில்லையென்று சொன்னால் அவர்கள் இஷ்டத்திற்கு முடிவெடுத்து க் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு petitionஐக் கொடுத்ததற்கு 18 எம்.எல்.ஏ.க்களை பதவி நீக்கம் செய்திருக்கின்றார்கள். ஆனால், எதிர்த்து ஓட்டு போட்டவர்கள்மீது எந்த நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை. இப்போது நான் நினைப்பதெல்லாம்,, இவர்கள்நாங்கள் இப்போது சண்டையில் இருக்கிறோம் என்று சொன்னார்கள். அது உட்கட்சிப் பிரச்சினை. சண்டை, சமாதானம் இல்லை. இன்னொன்று, ஆளுநர் வந்து இரண்டு பேரையும் அழைத்துச் சேர்த்து வைத்தால், இந்த அவை அன்றைக்கு யாரை எங்கு கொண்டு வைக்கும் என்று நான் என்ன முடிவு செய்ய முடியும்?

**நான்கு பிரிவுகளாக இருக்கிறார்கள்!**

விதியில் இருப்பதைத்தான் நான் சொல்ல முடியுமே தவிர, அது அவர்களுடைய உட்கட்சி விவகாரம், அதில் நான் தலையிடவில்லை. அதற்காக நான் அந்தக் கருத்துகளை சொல்லவில்லை. மூன்று நாட்களாக இதே ஏற்கெனவே எதிர்க்கட்சியில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. 3, 4 பிரிவு களாக இருக்கின்றன. டி.டி.வி. தினகரன் அவர்கள் தலைமையில் ஒன்று, ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் ஒன்று, திருமதி சசிகலா அம்மா தலைமையில் ஒன்று, எடப்பாடி அவர்கள் தலைமையில் ஒன்று என இப்படி நான்கு பிரிவுகளாக இருக்கிறார்கள்.

நான்கு பேருமே ஒரு புள்ளியில் ஒத்தக் கருத்தாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றிய அரசு பிரச்சினையை எடுத்துப் பேசும்போது அதற்கு ஒரு எதிர்க்கருத்து யாரிடமும் இல்லை. எல்லோருமே அதில் ஒத்தக் கருத்தாகத்தான் இருக்கிறார்கள். நாளைக்கு சேர மாட்டார்கள் என்பது எந்த நிலையிலும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்கள் சேரவே மாட்டார்கள் என்று யாரும் உத்தரவாதம் கொடுக்க முடியாது. முதலாளி கூப்பிட்டு உட்காருங்கள் என்று சொல்லி, நான்கு பேரையும் சேர்த்து வைத்துவிட்டால் நாம் என்ன செய்ய முடியும்? சேர்ந்து இருக்கட்டும், சந்தோஷம் என்றுதான் நாம் சொல்வோமே தவிர, நாம் வேறு ஒன்றும் சொல்லப் போவதில்லை.

ஆகவே, இவ்வாறு தொடர்ந்து கலகம் செய்து, கலவரம் செய்து இந்தப் பேரவையை நடத்தவிடாமல் இடையூறு செய்த காரணத்தினால் நம்முடைய அவைக் காவலர்களை அழைத்து அவர்களை வெளியேற்றம் செய்திருக்கின்றோம். ஆகவே, இது போன்ற நிகழ்வுகள் வருங்காலங்களில் நடைபெற்றால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது ஜனநாயகத்திற்கும் ஏற்புடையதல்ல.

இந்தப் பேரவையில், இந்த அரசு கொண்டு வருகின்ற மிக அருமையான நல்ல திட்டங்களையெல்லாம் மக்கள் நம்பியிருக்கின்றார்கள். ஆகவே, எந்தக் குறையும் சொல்ல முடியாத அளவிற்கு இருக்கின்ற காரணத்தினால், இடப் பிரச்சினையையும், அவர்களுடைய உட்கட்சி பிரச்சினையையும் இந்த அவையிலே வந்து முன்னெடுத்து, அதற்காக இந்த அவையைப் பயன்படுத்துவது நியாயம் இல்லை.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் விளக்கமளித்து பேசினார்.

# அத்திக்கடவு - அவினாசி திட்டப்பணிகள் முடிந்து விட்டன!

## பேரவையில் அமைச்சர் துரைமுருகன் தகவல்!



சென்னை, அக்.13 -

அத்திக்கடவு - அவினாசி திட்டப் பணிகள் எல்லாம் முடிந்துவிட்டன என்று சட்டப்பேரவையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அத்திக்கடவு - அவினாசி திட்டம் குறித்து எஸ்.பி.வேலுமணி எழுப்பிய கேள்விக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

உறுப்பினர் எஸ்.பி. வேலுமணி அவர்கள் நான் அன்றைக்கு பதில் சொல்லும்போது, அவர் இல்லையென்று கருதுகிறேன். அத்திகடவுஅவினாசி திட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தத் திட்டத்தை நீங்கள் கொண்டு வந்தீர்கள் என்பதை யாரும் இல்லையென்று சொல்லவில்லை. எல்லா வேலைகளும் முடிந்துவிட்டது, ஆனால் பணம் கொடுக்காமல் போய்விட்டீர்கள். ஒன்று pipe கொண்டு போவதற்கு ஆட்சேபணை எழுந்தது. இரண்டாவது, நீங்கள் pipeஐ கொண்டு போய் விடுங்கள் நாங்கள் பயிர் செய்து கொள்கிறோம் என்று சொன்னது. இதுபோன்று இரண்டு, மூன்று கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு, இப்போது ready ஆக இருக்கிறது. நாளைக்குகூட start செய்யலாம். இதோ சொல்கிறேன். காலிங்கராயன் channelக்கு 1.5. டி.எம்.சி. தண்ணீர் எடுக்க வேண்டும். Pump செய்தால்தான் தண்ணீர் போகும். நமக்கு காவிரியிலிருந்து தண்ணீர் இன்னும் வரவில்லை. காவிரியிலிருந்து தண்ணீர் திறந்து விட்ட மறுநாள் காலிங்கராயன் channelக்கு அடுத்த நாளே open செய்கிறோம்.

அடுத்து, நீங்கள் கேட்ட இரண்டாவது திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம் முடிந்த பிறகு, அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அதற்கான ஆய்வுகள் எல்லாம் மேற்கொண்டு இப்போது ready ஆக வைத்திருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பதிலளித்தார்.

# கும்பகோணம் தொகுதியில் பட்டா வழங்கிட - விரைவில் தகுந்த நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் - க.அன்பழகன் கேள்விக்கு - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பதில்!



சென்னை, அக். 13 -

சட்டப் பேரவையில், 10.10. 2023 அன்று கேள்வி நேரத்தின்போது, கும்பகோணம் தொகுதி கழக உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், தமது தொகுதியில் பட்டா வழங்கிட வேண்டியது குறித்து வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, வினாத் தொடுத்தார்.

அது தொடர்பான விவாதம் வருமாறு:-

**க.அன்பழகன்:** தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, திருநாகேஸ்வரம் பேரூராட்சிக் குட்பட்ட சன்னபுரம் மற்றும் அணக்குடி ஆகிய கிராமங்களில் 3 தலைமுறைகளுக்கும் மேலாக சுமார் 2,000 பொது மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வருவாய் ஆவணங்கள் ESR, UDR ஆகியவற்றில் உள்ள குடியிருப்புகளின் நிலைப்பாடு குறித்து ஏற்பட்ட தவறுகளை நீக்கி, OSR பதிவேட்டின்படி, மேற்கண்ட இடங்கள் குறித்து ஒட்டுமொத்த கிராமத்தையும் மறுஅளவீடு செய்திட வேண்டும். குடியிருப்புப் பகுதியாக இருந்ததை எவ்வித ஆதாரமுமின்றி கோயில் நிலமாக வகைப்பாடு செய்து பதிவேட்டில் தவறுதலாகப் பதிவேற்றம் செய்ததால், அறநிலையத் துறையால் அந்தப் பகுதி மக்கள் பெரும் பாதிப் படைகிறார்கள். இதுகுறித்து பொதுமக்களுடைய 60 வருடக் கோரிக்கையினை அரசு ஏற்று முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திலும்கூட பட்டா வழங்குவதில் விரைவாக கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுடைய நிலங்களுக்குப் பட்டா வழங்குவார்களா?

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்:** சட்டமன்ற உறுப்பினர் இதுகுறித்து என்னிடம் பேசியிருக்கிறார். இதுபோன்று நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய பகுதியிலே பட்டா வழங்க வேண்டுமென்று என் மத்தியிலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கையை நிச்சயமாக நம்முடைய அரசாங்கம் எடுக்கும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு - கழக மகளிர் அணி முன்னெடுக்கும் - மகளிர் உரிமை மாநாட்டில்

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் பெருந்திரளாகக் கலந்துகொள்வீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



கடலூர், அக். 13-

மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு கழக மகளிர் அணி முன்னெடுக்கும் மகளிர் உரிமை மாநாடு நாளை (14.10.2023 - சனிக்கிழமை) மாலை 3.00 மணியளவில் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறுகிறது. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று உரையாற்றுகிறார்.

மேலும் முன்னாள் காங்கிரஸ் தலைவர் திருமிகு. சோனியாகாந்தி, காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர் சுப்பிரியா சுலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சுபாஷினி அலி, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனி ராஜா உள்ளிட்ட ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் மகளிர் தலைவர்கள் சிறப்புரையாற்றுகிறார்கள்.

அதுசமயம், பெண் உரிமை போற்றும் இந்த மாநாட்டில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், மாநில, மாவட்டக் கழக மகளிர் நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக மகளிர் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு மகளிர் உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற மகளிர் பிரதிநிதிகள், மாநகர மேயர், நகரமன்ற, பேரூராட்சி மன்ற, ஊராட்சிமன்ற மகளிர் தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு மகளிர் உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர்கள், மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மகளிர்கள் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தமது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.





நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னையில் எழுப்பப்பட்ட பண்பாட்டு அடையாளங்களுக்கும், அறிவு சார்ந்த கட்டிடங்களுக்கும் அரசுப் பள்ளி மாணவச் செல்வங்களை அழைத்துச் செல்லும் “கலைஞர் வழித்தடத்தில் ஒரு பயணம்” எனும் மாணவச் செல்வங்களுக்கான ஒருநாள் கல்விச் சுற்றுலாவை சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். பள்ளிக் கல்வித்துறை இயக்குனர் முனைவர் க.அறிவொளி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மார்ஸ் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# திராவிட சினிமா

27

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**



## ‘முன்னத்தி ஏர்’ ஆசைத்தம்பி!

படம் - உதவி : ஞானம்



திராவிட சினிமா குறித்த ஆய்வில், இதுவரை அதன் முதன்மைப் பங்களிப்பாளர்களும் திசை வழிகாட்டிகளுமான பேரறிஞர் அண்ணா அவர்கள் தீட்டிய திரைக்காவியங்கள் தொடங்கி, அவர் வழி தொடர்ந்து திராவிடச் சினிமாவை அதன் சாத்தியங்களின் எல்லைவரை வளர்த்தெடுத்த கலைஞர் அவர்களின் திரை ஓவியங்களைத் தொடர்ந்தோம்.

கலைஞர் திரைப்படங்களைத் தொடர்ந்த நம் பயணம், 1967-ஆம் ஆண்டை எட்டிவிட்டது. இடைப்பட்ட காலத்தில் கலைஞர் திரைக்கதை வசனம் எழுதிய ‘நாம்’ (1953), ‘தாயில்லாப் பிள்ளை’ (1961), ‘மறக்க முடியுமா?’ (1966) ஆகிய திரைப்படங்களை இணையதளங்களில் கண்டடைய இயலவில்லை. இளவயது முதல் என் நினைவில் நிலைத்து நின்ற கலைஞரின் ‘காகித ஓடம் கடலலை மீது போவது போலே மூவரும் போவோம்’ எனும் காவிய சோகத்தை உருவாக்கிய பாடலைக் கொண்ட திரைப்படம் ‘மறக்க முடியுமா’ இழப்பும் காவிய சோகம்தான்.




நிற்க, திராவிட சினிமாவில் பங்களிப்பு செய்த ஆளுமைகளில் சிலரையேனும் நினைவில் இருத்துவது ஒரு ஆய்வுமுறைமையின் நேர்மையெனக் கருதுகிறேன். அந்த வகையில், முதலாவதாக, இந்த ஆண்டு நூற்றாண்டு காணும் ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் பங்களிப்புக் குறித்துப் பார்க்கலாம்.

### முன்னத்தி ஏரின் இதழ்ப் பணி

ஆசைத்தம்பி அவர்கள் திராவிடர் கழகத்தில் தொடங்கி, திராவிட முன்னேற்றக் கழகம் வரை தொடர்ந்தவர். கலைஞர், கண்ணதாசன் ஆகியோருடன் அதே காலவெளியில் (1948-1952) மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தின் கதை இலாகாவில் பணியாற்றியவர். அவரது திரையுலகப் பங்களிப்பு இரண்டு வகையானது. ஒன்று, திரைத்துறையில் நேரடியாகப் பணி செய்தது. இரண்டாவது, **‘திராவிடச் சினிமா’** என்ற பெயரிலேயே 1955-ஆம் ஆண்டு முதல் 1963-ஆம் ஆண்டு வரை திரைப் பத்திரிக்கை நடத்தியவர் என்பது. இந்த இரண்டாவது பங்களிப்புக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

மறைந்த அன்புத் தம்பி முனைவர் பாவேந்தனுடன் இணைந்து, **‘திராவிட சினிமா’** நூல் தொகுப்பினை உருவாக்கிய போது அந்த ‘திராவிட சினிமா’ எனும் பெயரை ஆசைத்தம்பி அவர்கள் அதே பெயரில் நடத்திய இதழிலிருந்தே நன்றியுடன் இரவல் பெற்றோம்.

இந்த முன்னத்தி ஏர் செய்த இதழ்ப் பணி மகத்தானது. இன்று ‘திராவிட சினிமா‘ என்று திராவிட இயக்கத்தவர் உருவாக்கிய திரைப்படங்களை அடையாளம் காண்பதும், ஆய்வுப் பொருண்மையாக்குவதும் பெரிதல்ல. ஆனால், அந்தத் திரைப்படங்கள் உருப்பெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே அவற்றைத் ‘திராவிட சினிமா’ என வகைமைப் படுத்தியது பெருமிதத்துக்குரியதும், அரிதானதுமாகும். அன்றைய நாளில் **தேசிய சினிமா, தெய்வீக சினிமா** எனும் வகைமைகள் அடையாளம் காணப்படவோ பேசப்படவோ இல்லை.

### திசை வழிகாட்டிய தலையங்கம்

ஆசைத்தம்பியின் திராவிட சினிமா குறித்த அரசியல் புரிதலுக்கு அவரது 05.09.1956 தேதி இதழின் தலையங்கமே சாட்சி. அந்தத் தலையங்கம் இப்படிச் சொல்கிறது:

“ஒரு நாளில் திரைத்துறையின் அத்தனை துறைகளையும் பார்ப்பனர்களே ஆக்கிரமித்திருந்தனர். ஆனால், இப்போதோ ‘சுயமரியாதைக் கட்சியின் இடைவிடாத முயற்சியால் காலம் மாறியது. திரைப்பட உலகத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. புராணப் படங்கள் பார்ப்பாரற்று இருக்கும் பரிதாபநிலை ஏற்பட்டது.

கதை எழுதவா? வசனம் அமைக்கவா? பாடல் எழுதவா? பாட்டுப் பாடவா? ஆடல் அமைக்கவா? ஆடவா? நடிக்கவா? ஆகிய அத்தனையிலும் பிராமணரல்லாத திராவிடர்கள் திறமையால் மேலோங்கி வந்துவிட்டனர்!.

பத்திரிக்கைத் துறையில்கூட ஆரிய ஆனந்த விகடனுக்கு நிகர் வேறு கிடையாது என்று இருந்த இறுமாப்பான நிலையைத் திராவிட ‘குமுதம்’ சுக்குநூறாக நொறுக்கி விட்டது. இதன் பேரில் மனம் புழுங்கி அடிவயிறு எரிய, பொறாமை நெஞ்சை அறுக்க ஆனந்த விகடன், திராவிட நடிகர்களான எம்.ஜி.ராமச்சந்திரன் - சிவாஜி கணேசன் இடையே ‘இவர்கள் சந்தித்தால்’ எனும் பெயரில் ‘கற்பனைக் கதை’ எழுதி, அதில் ‘பார்ப்பனச் சிண்டு முடியும்’ வேலையைச் செய்திருக்கிறது. இப்படிக் கழிசடைத்தனமாக எழுதுவதன் மூலம் முன்போல விலைபோகாத தன் சரக்கின் விற்பனையையும் உயர்த்திட முயற்சிக்கிறது....

விகடரே வேண்டாம் இந்தக் குரங்குப் புத்தி. இரட்டைக் குழந்தை படக் கம்பெனி உம்மிடம் இருக்கிறதே! உம்மால் ஒரு சிவாஜியையோ, எம்.ஜி.ஆரையோ உருவாக்க முடிந்திருக்கிறதா? இல்லை ஒரு இளங்கோவனைப் போல, ஒரு கலைஞர் கருணாநிதியைப் போல ஒரே ஒரு வசன கர்த்தாவை உற்பத்தி செய்ய முடிந்ததா?”.

இந்தத் தலையங்கம் நமக்கு விளக்கும் செய்தி, ‘திராவிட சினிமா’ அது உருப்பெறும் காலத்திலேயே, பல்வேறு திரைத்துறை சார்ந்த சேவைகளில் ஈடுபட்டிருந்தோர், ஒரே வேளையில் அவற்றைத் தமது சொந்த ஆக்க முயற்சியாகவும், பொதுவான திராவிடத் திசைவழிப் பயணத்தின் பகுதியாகவும் கவனத்தில் கொண்டே செயல்படுத்தினர் என்பதே.

### ஒரே குலம் ஒன்றே நீதி

திரைத்துறை ஆக்கப் பணியில் நேரடிப் பங்களிப்பு என்ற வகையில் ஆசைத்தம்பி அவர்களது பெயர் சொல்லும் படைப்புச் சொற்பமானதே. 1951 ஆம் ஆண்டில் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில், டி.ஆர்.சுந்தரம் இயக்கத்தில் எம்.ஜி.ஆர், அஞ்சலிதேவி, நம்பியார், நாகையா, டி.பி.முத்துலட்சுமி நடிப்பில் உருவான வெற்றிப் படமான **‘சர்வாதிகாரி’** படத்தின் வசனகர்த்தா அவர்தான்.

போரால் நாட்டின் பொருளாதாரம் அழிந்து அல்லலுறும் மக்களின் துயர் போக்க ராணுவத்தைக் கலைக்கத் திட்டமிடும் படைத் தளபதிக்கும், பொம்மை அரசனை முற்றாக வீழ்த்தி சர்வாதிகாரி ஆக மீண்டும் போருக்குத் தள்ளும் அமைச்சர் ஆகியோருக்குமான அரசியலே கதைக் களம்.

**இறுதியில் அமைச்சரை வீழ்த்தி, நாட்டை ‘திராவிட சினிமா’ வகுத்த வழியில் முடியரசை கலைத்துக் குடியர சாக்குகிறார்கள்.**

இறுதியில் அமைச்சரை வீழ்த்தி, நாட்டை ‘திராவிட சினிமா’ வகுத்த வழியில் முடியரசை கலைத்துக் குடியர சாக்குகிறார்கள். இறுதியான அறிவிப்பு, ‘இனி நாட்டில் சாதி இருக்காது. ஒரே நீதியிருக்கும். சர்வாதிகாரம் இருக்காது. சமத்துவம் இருக்கும். குலம் ஒன்றுதான். கடவுளும் அப்படியே. கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போகும்‘ என்கிறது.

...படம் விரியும்

## எளிய மக்களின் குரல் உலகின் காதுகளை எட்டாது!



இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினை மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில், இரண்டு தரப்பிலும் நிகழும் தாக்குதல்களால் மிகப்பெரிய அளவில் உயிர்ச் சேதங்கள் நிகழ்ந்து வருகின்றன. அந்த நிலப்பரப்புக்கு உரிமை கொண்டவர்கள் யார் என்பதில் பெரும் சிக்கல் நீடிக்கும் நிலையில், உலக நாடுகள் இஸ்ரேல் பக்கமும், பாலஸ்தீனம் பக்கமும் அணி சேர்வது சிக்கலின் அடுத்த கட்ட அபாயத்துக்கு வழி வகுக்கின்றன. இந்த நிலையில் இஸ்ரேல்- பாலஸ்தீனப் பிரச்சினையில் பல பக்கங்களை அலசுகிறது **‘நைல் முதல் ஃபுராத் வரை’** என்கிற இந்த நூல். **‘சமரசம்’** இதழில் வெளியானபோதே வரவேற்பைப் பெற்ற இந்தக் கட்டுரைகளைத் ‘துருவம் பதிப்பகம்’ நூலாக வெளியிட்டுள்ளது.

**புதுமடம் ஹலீம்** எழுதிய இந்த நூலுக்கு அணிந்துரை அளித்துள்ள எழுத்தாளர் முத்துகிருஷ்ணன். “பாலஸ்தீனத்தில் தங்களின் கட்டை விரலை எடுத்து வைத்த யூதர்கள் எப்படி மெல்ல மெல்ல தங்களின் கால், கை, உடல் என மொத்த நிலத்தையும் ஆக்கிரமித்து அந்த நிலத்தின் பூர்வக்குடியான பாலஸ்தீன மக்களை அதனைச் சுற்றிய நாடுகளுக்கு விரட்டி அகதிகளாக மாற்றியிருக்கிறார்கள், சொந்த நாட்டில் எஞ்சி வாழுகிற வர்களும் அகதிகளாகவே உரிமையற்றவர்களாக ஒடுக்கப்பட்டவர்களாகவே வாழ்கிறார்கள் என்பதை உணர வைக்கும் நூல்.

இந்தப் புத்தகத்தை வாசித்து முடிக்கும் நேரம் என் மனதில் அரபு நாடுகள், மத்தியத் தரைக்கடல் நாடுகள், ஆப்பிரிக்க நாடுகளின் ஒற்றுமையின்மைதான் இந்தப் பிரச்சினை இத்தனை பெரும் வரலாற்று விஸ்வரூபம் எடுப்பதற்கு வழிவகுத்துள்ளது. இஸ்லாமிய நாடுகள் முழுமையிலும் இருக்கும் குடிமைச் சமூகத்தில் ஜனநாயகம் வராத வரை பாலஸ்தீனத்திற்கு ஆதரவான எளிய மக்களின் குரல் அங்கிருந்து ஒரு போதும் வெளி உலகின் காதுகளை எட்டாது” எனக் குறிப்பிடுகிறார்.

## ஃப்ளாஷ்பேக்



### சலவை நோட்டு சால்வை!

நெருக்கடி நிலை அமலிலிருந்த காலத்தில், வெட்ட வெளியில் பொதுக்கூட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது. கழக மூத்த தலைவர்கள் பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டு மிசா கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். இப்படியான காலகட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களை 1977-ஆம் ஆண்டு வேலூர் மாவட்டத்துக்கு அழைத்து கிருஷ்ணா திரையரங்கத்தில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தோம். நெருக்கடி நிறைந்த சூழலிலும் தொண்டர்களை உற்சாகமூட்டும் வகையில் அவரது பேச்சு அமைந்திருந்தது. அந்தச் சமயத்தில் மாவட்டப் பிரதிநிதியாக இருந்த நான் தலைவர் அவர்களுக்குப் பண நோட்டுக்கள் கொண்ட சால்வையை அணிவித்து மகிழ்ந்தேன்.



முகமது சகி

**-தி.அ. முகமது சகி,**
**மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர்,**
**அவைத் தலைவர், வேலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### தம்பிக்குக் கடிதம்!

**1955-ஆம் ஆண்டு, மே மாதம் 8-ஆம் தேதியில் இருந்து ‘திராவிட நாடு’ இதழில் ‘தம்பிக்குக் கடிதம்’ எழுதத் தொடங்கினார் பேரறிஞர் அண்ணா. தம் தோழர்களை தம்பிகளாகக் கருதி, அவர்களுக்குப் பல துறைகளில் பயிற்சி அளிக்கவும், கட்சியை வளர்க்கவும் அண்ணா ‘கடித இலக்கியம்’ படைத்தார். 15 ஆண்டுகளில் எழுதப்பட்ட 290 கடிதங்களில் அண்ணா மிகப்பெரிய அரசியல் எழுச்சியை ஏற்படுத்தினார். இடையில் சில ஆண்டுகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடிதங்கள் ‘ஹோம்லேண்ட்’, ‘ஹோம் ரூல்’ இதழ்களிலும் வெளிவந்தன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

268




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.